

சுபமஸ்து.

# தமிழகம்.

261

வால்யூம் 1 | 1905ஞு செப்டம்பர்மீ | நம்பர் 9.

## ஒற்றுமை.

கல்வி செல்வம் புகழ் வலி நாகரிகம் ஆதியவற்றுள் ஒன்றையேனும் பலவற்றையேனும் பெற விரும்பு மொருவர்க்கு ஒற்றுமை யென்பது இன்றியமையாதுற்றதுணையாம் எத்துணைப் பெருவலியுடையார்க்கும் தக்க துணைவலியின்றி எடுத்த கருமம் முடித்தலியலாது. துணைக்கோடலும் ஒற்றுமை யில்வழி இன்றாகும். பொருளிலாரும் வலியிலாரும் முறையே ஆசையினாலும் அச்சத்தினாலும் பொருளுடையார்க்கும் வலியுடையார்க்கும் துணையாயிருத்தலால், ஒற்றுமை யென்பதொன்று வேண்டப்படுவதன்றெனில், தேசாபிமானம் பாஷாபிமானம் சமயாபிமானம் சாதியபிமானம் முதலியவற்றால் வாதங்கணேர்ந்து கலாம் விளைந்துழி, துணைசெய்வோரும் தம்முட்கூடி ஒருங்கே அது செய்யாது நின்றவிடத்து எத்தனையோ கைத்தொழிற் சாலைகளும் வேலைத்தலங்களும் தொழிலற்றுவாளாக் கிடத்தலோடமையாது அப்பொருள் வலியுடையாரும் பொருளழிவும் அவமானமும் அடைதலின், யாவர்க்கும் ஐக்கியம் முக்கியமாம். அவ்வைக்கியமும் ஒளவியநீங்கி அன்பினோங்கிய பண்பினர்க்கே வரும் பாக்கியமாம்.

எந்நாடும் புகழ் நன்னாடாகிய நந் தென்னாட்டிலே பண்டைக்காலத்துப் புவிமன்னராலும் கவிமன்னராலும் ஒற்றுமை பெரிது பேணப்பட்டன தென்பது, மழைவரம் வேண்டி தேவேந்திரன் சபைக்கு மூவேந்தரும் சென்ற சரிதத்தானும், முத லிடை கடைச் சங்கங்களானும் உணரப்படும். பிற்காலத்திருந்த நம்மரசினர் அழுக்காறு நிறைந்து அன்பு குறைந்து உட்பகை மலிந்து ஒற்றுமை நலிந்தமையால், வேற்றரசர் படையெடுத்த காலத்தில் "மொய் சிதைக்கு மொற்றுமை யின்மை" யென்றபடி தனித்து நின்று தம்வலியழிந்து அரசிழத்தலும் ஆயினர்.

கல்வி விருத்திக்கு ஒற்றுமை இன்றியமையாச் சிறப்பின தென்பதை உலகினர் அறிந்துய்யுமாறு கண்ணுதற் பெருங்கடவுளும் கந்தவேளும் கழகமோடமர்ந்து பண்ணுறத் தெரிந்தாய்ந்தமை நன்கறிந்தும், சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினராகிய நம்போலிய புலவருட் பெரும்பான்மையோர் தாம் புதிதாகக்கண்ட நூல்களையும் உரைகளையும் தக்க வித்துவசங்கங்களில் அரங்கேற்றாது பொய்ப்புகழையும் பொருளையும் விரும்பித் தங்கள் தங்கள் மனம்போன வாறே புதுக்கியும் ஒதுக்கியும் பெருக்கியும் சுருக்கியும் திருத்தியும் பொருத்தியும் அச்சிற் பதித்த வழுச்சுவடிகளால் தம்மையும் பிறரையும் இம்மையும் மறுமையும் இழக்கவைத்தல் வெட்கமும் துக்கமு மன்றித் தக்கதெனப்படுமா ?

நரம்பு தண்டு சுரை என்பன ஒருங்கு சேர்ந்தால் யாவர் யனைத்தையும் வசிகரிக்கு மின்னிசை நிறைந்த யாழ் எனப்படும். அவை தனித்தனி பிரிந்தால் நரம்பு வேடர்கைக் கண்ணியெனவும், தண்டு விறகெனவும், சுரை பிரசுதாபாத்திர மெனவும் படும்.

பொருளீட்டும் வழியில் கிருஷிகத் தொழிற் சங்கம், கைத்தொழிற் சங்கம், வியாபாரசங்கங்களும், புகழீட்டும் வழியில் தருமபரிபாலன சங்கங்களும் கூட்டி அவற்றைத்தேட நம்மவருக்கு இயன்ற சக்தியிருந்தும், குறைந்த தொகை இருவராவது ஒருமித்து நின்று தங்கள் முயற்சியின் பயனையடையாது, தனித்து முயன்று எடுத்த கருமங் கைகூடாது மனஞ் சலிக்கின்றனர். "தனிமரமுந் தோப்பாமா ?" என்றனர் ஆன்றோர். மேனாட்டவராகிய ஐரோப்பியர் எம்மூர்ப் பொருளனைத்தை

யுந் தேடிக்கொள்ளல், அவரது ஒற்றுமையில் வந்த சங்கங்கள் தந்தபயனன்றி வேறென்னென்போம்?

சிலர் தங்குடும்ப விஷயங்களிற் சிறிது வேற்றுமை யுற்றனரேனும் பொதுநலவிஷயங்களில் ஒற்றுமை சாதித்து வெற்றி பெறுகின்றனர். சிலர் குடும்பத்தளவில் நண்பினராயிருந்தும் பொது விஷயங்களில் பொறாமைமிக்குத் தீங்கு விளைத்து வேற்றுமைகாட்டித் தோற்றழிகின்றனர்.

தேவரும் அசுரரும் அமிர்தம் பெற விரும்பித் தங்கள் குலப்பகைமையையும் பாராட்டாது ஒருங்கு சேர்ந்து பாற்கடல் கடைந்து அமிர்தமேயன்றிப் பல பெருந்திருப் பெற்றமையானும், மோகினியை வேண்டிய அசுரர் ஒற்றுமையின்றி உட்பகை கொண்டுமாய்ந்த பெற்றியினானும் ஒற்றுமையின் வெற்றியும் தனிமையின் சிறுமையும் இத்துணைத் தென்றுணரப்படும்.

ஆதலின் எவற்றினும் முன்வர விரும்புவோர் யாவரும் ஒற்றுமை கைப்பற்றல் உத்தமம்.

யாழ்ப்பாணத்துத்,
திருநெல்வேலி. } திரு. சோமசுந்தரப் பிள்ளை.

---

# ஆயுள்விருத்தி நூல்.

(156-ம் பக்கத்தொடர்ச்சி)

(d) சரீரத்தில் எவ்வளவு வஸ்து சேதப்பட்டதோ அந்த அளவு திரும்பவும் உண்டாக்கப்படும்பட்சத்தில் ஆயுள்விருத்தி குறைவுபடாது. ஆகையால் எந்தப் பிராணிக்கு உள்ளும் புறம்பும் உண்டாக்க அல்லது புதுப்பிக்கப்படும் சக்தி தீவிரமாய் அமைந்திருக்கிறதோ அந்தச் சீவனுக்கு ஆயுள்விருத்தி ஜாஸ்திப்பட்டே இருக்கும். சுருங்கச் சொல்லுமிடத்து நீண்ட ஆயுளானது ஓர் பிராணியின் ஜீவசக்தியின் அளவையும், அவயவத்தின் உறுதி அல்லது மெலிவையும், தீவிரமுள்ள அல்லது மெதுப்பட்ட நஷ்டத்தையும் நஷ்டத்துக்குச் சரியான அல்லது குன்றந்த புதுப்பிக்கப்படுதலையும் (Restoration) பொறுத்திருக்கிறது. மேற்காட்டியமுக்கியமான அம்சங்களின் உதவியால் அநேக சிக்கலான கேள்விகளுக்கு பதில் நமக்கு வெகு எளிதில் விசதப்படும். ஆயுள் ஜெனன ஆரம்பத்திலேயே

நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா? அல்லவா? என்ற வினவானது அநேக தத்துவ சாஸ்திரிகளுக்குள் விகற்பமான சம்வாத மடைந்து ஆயுள் நூலின் கொள்கைக்கு விருத்தப்பட்டிருப்பதையும் நாம் அறிவோம் அவரவர் கொள்கைக் கிணங்க அவர்கள் தகுந்த சமாதானம் சொல்லியே முடிப்பார்கள். அது எவ்வண்ணமாயினும் மேற்கூறிய சங்கைக்கு ஒருவாறு பின்வரும் விடை பகரலாகும்:—

ஒவ்வொரு ஜாதி அல்லது வகுப்பைப்பற்றியும் (அது மாத்திரமல்ல) ஒவ்வொரு சிவனைப்பற்றியும் ஆயுள் அளவை நிர்ணயிப்பதற்கு மேற்கூறிய ஜீவசக்தி, சரீரபலம், சரீரநாசம், சரீரப்புதுப்பிப்பு இவைகளைக்கொண்டுதிடமாகச்சொல்லக்கூடும்; எவ்வளவில் சரீரம் எவ்வளவு நஷ்டமடையாமலிருந்து வருகிறதோ அவ்வளவுக்கு ஆயுள் விருத்தியடைந்து வருகிறது. ஆயுள் விருத்தி அல்லது காயசித்தி செய்துகொள்வதற்கு மார்க்கம் உண்டோ? என்று பெரும்பான்மையோர் கேட்பது வழக்கம். ஆயுள் விருத்தியானது மந்திரத்தினாலாவது தங்கசத்து முதலிய ஔஷதங்களை உட்கொள்வதினாலாவது சித்திக்கக்கூடியதல்ல. "மந்திரத்தில் மாங்காய் விழுமா?" என்னும் நீதிமொழியும் உங்களுக்குத் தெரிந்ததுதான். ஆகையால் அவைகளால் ஜீவசக்தியின்றன்மைப் பலப்படுத்தவும் விருத்தியையடைவிக்கவும் ஜீவ இயற்கையை மாற்றுவிக்கவும் முடியாது. பின்னர் நீண்ட ஆயுள் எவ்வாற்றாற் கூடுமென்னின், கீழே குறிப்பிக்கப்படுகிற நான்கு விஷயங்களைச் சரிவரக் கவனித்தால் மட்டும் ஆயுள் விருத்தி பொருந்தும். அவைகளாவன:- (1) ஜீவசக்தியின் தன்மை, (2) ஜீவ இந்திரியங்களின் (Vital organs) பலம், (3) சரீரத்தின் அங்கங்கள் சேதமல்லது நாசமடைவதை மெதுப்படுத்தல், (4) சரீரத்தின் அங்கங்களின் புதுப்பித்தலை விருத்தி செய்தல்; மேற்சொன்னவைகளோடும் கூட அமைவுள்ள ஆகாரம், நடை, உடை, சிவனம், சீதோஷ்ணம் முதலியவைகளும் அத்யாவசியமாய் வேண்டியிருக்கின்றன. இவைகளில் எவ்வளவுக்கு இடையூறு நேர்ந்ததோ அந்தப் பிரமாணத்துக்கு ஆயுள் விருத்திக்கு ஹானியுண்டாகுமென்பது சொல்லாமலே விளங்கும். ஆகையால் ஒவ்வொரு பிராணியினுடைய சீவசக்தியின் செலவுக்குத் தகுந்தபடி ஆயுள்விருத்தியும் குறைவுபடும். உதாரணமாக இரண்டு பேர்களுக்கு ஒரே

அளவான திரவியம் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அவர்களில் ஒருவன் மற்றொருவனைவிட இரட்டிப்புப் பங்கு செலவழித்து வருவானாகில், முந்தினவனுடைய சொத்தானது பிந்தினவனுடைய சொத்து முழுவதும் செலவழியும் காலத்திற்கு பாதி அளவிலேயே செலவழிந்து போகுமல்லவா? அதுபோல் பிராணிகளுக்கும் சீவசக்தி எவ்வளவு தீவிரமாய்ச் செலவழிக்கப்படுகின்றதோ அந்த நிறைக்குத் தகுந்தபடி ஆயுள் விருத்தி குறைந்துபோம். ஆகையினால் எவனொருவனுக்கு ஜீவசக்தி சுறுசுறுப்பான தன்மையிலிருக்கிறதோ அவனுக்கு ஆயுள் குறையுமென்பதற்குத் தடையில்லை. இந்த உண்மையான விதியானது ஜீவவர்க்கத்தில் மாத்திரம் பொருந்தாமல் எல்லா இயற்கையிலும் நிறைந்திருக்கிறது.

ஒரு செடிக்கு உஷ்ணத்தையும் எருக்களையும் ஜாஸ்தி அளவாகக் கொடுத்துப் போஷிக்கும் பட்சத்தில் மற்றச் செடிகளைவிட சீக்கிரத்தில் செழுமையாக வளர்ந்து விரைவில் செத்துப் போகிறதையும் பார்க்கிறோம். ஆகையினால் இயற்கையில் உயர்தரமுள்ள மனிதரைவிடத் தாழ்ந்தவகுப்பிற்குரிய விருட்ச ஜாதிகள் ஜீவசக்தியினுடைய முயற்சிக் குறைவினால்தான் நீண்டகாலம் உயிரோடிருக்கின்றன.

ஜீவசக்தியின் முயற்சி அதாவது சுறுசுறுப்பு அதிகப்பட்டுள்ள ஜீவவர்க்கத்தில் உயர்ந்த பிரிவைச் சார்ந்த மானுடர்களுக்கு அந்த முயற்சியை ஒருவாறு மட்டுப்படுத்தக் கடவுளானவர் நித்திரையாகிய ஓர் ஒப்பற்ற அமைதியை நமக்குக் கொடுத்திராவிட்டால் நாம் சடுதியில் மரண இராச்சியத்திற்குள் பிரவேசிக்கவேண்டுமல்லவா? ஆதலால் சர்வ ஜீவதயாளுவாகிய ஸ்ரீபகவானுக்கு நாம் நன்றி செலுத்த எவ்வாறு கடமைப்பட்டிருக்கிறோம் பாருங்கள்! நித்திரையானது நமக்கு அளிக்கப்படாதிருக்கும் பட்சத்தில் நாம் நாள் முழுவதும் ஓய்வின்றி வேலைசெய்து சுரம் முதலிய வியாதிகளால் மேற்கொள்ளப்பட்டு அந்தோ! சீக்கிரத்தில் மரணத்திற்கு மாளாவோம்! நித்திரையின் சுகத்தைப்பற்றிக் கைவல்லியக்காரர் “தூங்கும் சுகமே பிரமச்சுகமெனல் சுருதிப்பொருள்” என்று திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்.

ஆங்கிலக்கவிஞராகிய (Mr. Young) எங்கு என்பவர் (Night Thoughts என்னும்) ஒரு புத்தகத்தில் நித்திரையின் உபயோ

கத்தைப் பற்றிச் செய்யுளில் பின்வருமாறு சொல்லியிருக்கிறார்.

"Tired Nature's Sweet restorer, balmy sleep!" இளைப்பைத் தீர்த்து தாமே சோர்வடைந்த அவயவங்களை உயிர்ப்பித்து இனிமை பயக்கும் தூக்கமே!—இதனால் நித்திரையை யாவரும் அதிகமாய்ச் செய்யவேண்டுமென்பது கருத்தல்ல. பிரதி தினமும் 6 முதல் 8 மணிகள் வரையில் ஒவ்வொருவரும் தூங்கினாற்போதும். தாவர வர்க்கங்களுக்கும் நித்திரை அமைக்கப்பட்டுள்ளதாவென்று விசாரணை செய்யில் அவைகளுக்கும் நித்திரை அல்லது அமைதி உள்ளதென்றே புலப்படுகிறது. எவ்வாறெனில் அவைகள் புஷ்பபலாதிகளை ஜீவசக்தியின் முயற்சியினால் எப்போதும் நமக்குக் கொடுக்கிறதில்லை. மாரிகாலத்தில் அவைகள் அமைதியுற்றிருந்து வசந்த காலத்திற்றான் புஷ்ப, கனிவர்க்கங்களை நமக்குக் கொடுக்கின்றன. இதனால் தாவர வர்க்கத்துள்ளும் ஜீவ சக்தியின் ஓய்வாகிய நித்திரை பொருந்தியிருக்கிறதென்பது நமக்குத் தெற்றென விளங்கவில்லையா? இதுவுந்தவிர, மனித ஜாதியாகிய நாம் இராக்காலத்தில் நித்திரையுறும்போது கருவி கரணாதிகள் சலனமற்று இருவிழிகளும் மூடி உறங்கிக் கிடப்பனபோலத் தாவரவர்க்கங்களிற் சில, இலைகளைக் குவித்து உறங்குவனவாகிய தோற்றத்தைக் காண, நமக்கு எவ்வளவு ஆச்சரியம் விளைகின்றது பாருங்கள்! அவைகளை விவசாயிகளும் தாவர சாஸ்திரிகளும் நன்குணர்வார்கள்.

(இன்னும் வரும்.)

**S. குமாரசாமி மேற்கொண்டார்.**

# ஆரியர்களின் ஸங்கீத முறை.

(159-ம் பக்கத்தொடர்ச்சி.)

இந்தப் பிரகாரம் பிரஸ்தரித்துக் கணக்கிட்டு உண்டாகும் ஸம்பூர்ண ராகங்களில் சிலவற்றை மட்டும் ஸங்கீதத்தின் நிஜ ஸ்வரூபத்தைக் கண்டு கொண்ட ஸ்ரீதியாகராஜய்யர் அவர்கள் ராகம் தரும்படியானவை என்று நினைத்து அவைகளில் மட்டும் ஸாஹித்யம் பார்த்திருக்கிறார்கள். அவருக்குப் பிற்காலம்

உதித்த ஸ்ரீ மஹாவைத்தியநாதய்யரும் இந்த 72 ராகங்களிலும் ராக ஸ்வரூபம் விளக்கும்படியாக ராகமாலிகை ஒன்று இயற்றியிருக்கிறார்கள். இந்த மாதிரி 72 ராகம் உண்டென்கிற ஏற்பாடு கர்நாடக ஸங்கீத சாஸ்திரங்களில் மட்டும் வழக்கத்தி லுள்ளது.

ஐரோப்பியர்களது ஸம்பிரதாயத்தில், சங்கராபரணம், தோடி, நடபைரவி, ஹரிகாம்போதி, ஆகிய நாலு மேளங்கள் மட்டும் உபயோகத்தில் வைத்திருக்கிறார்கள். மேலும் அவர்கள் கானத்தைக் கவனித்தால், பாடுங் காலத்தில் ஒரே ஸாஹித்யத்தில் அநேகவிதமான ஸ்வரங்களை உபயோகித்துக் கொண்டிருப்பதால் அவை இன்ன ராகந்தான் என்று சொல்ல இடமில்லாமலிருக்கிறது; இது காரணத்தாலே அவர்கள் நம் ஸம்பிரதாயத்திலுள்ள ராகம் என்னும் விஷயத்தை அறிந்து சந்தோஷிக்கமுடியாதவர்களாயிருக்கிறார்கள்.

தஞ்சாவூர் ஸமஸ்தானத்தில் மகாராஷ்டிரராஜாங்கம் ஏற்படுவதற்குமுன் அரசாண்டுவந்த நாயக்கராஜவம்சத்தில் அச்சுத நாயக்கர் நாளில் வேங்கடமகி என்னும் ஸங்கீத சாஸ்திரக்காரர் ஸ்வரமேளகலாநிதி என்னும்கிரந்தம் செய்திருக்கிறார். மேலும் அவர் லக்ஷணகீதம் என்று மற்றொரு கிரந்தமும் செய்திருக்கிறார். அவரது ஸம்பிரதாயத்தில் நமக்குப் பழக்கத்தி லில்லாத ஒரு மாதிரியாய் மேளகர்த்தா ராகங்களுக்கு வேறுவிதமான பெயரிட்டிருக்கிறார். அது மட்டும் இல்லை. அவரது ரீதியாய் ஜன்யராகங்களுக்கு வெகுவாய் நமக்குத் தெரிந்த மாதிரி பெயர்கள் இல்லாமலிருக்கின்றன. ஆனால் எல்லா ராகங்களுக்கும், அவர் படித்தவரானதால் சுலோக பூர்வமாய் லக்ஷணங்கள் அமைத்திருக்கிறார்.

அவரது ஸம்பிரதாயத்தில் சில விஷயங்கள் விநோதமாயிருக்கின்றன. மேளகர்த்தா வென்றால் யாரும் ஸம்பூர்ண ராகம் என்று நினைக்கிறது வழக்கம். ஆனால் அவருடைய மேளங்களில் சில வர்ஜ்யராகங்களாயிருக்கின்றன. அதாவது சில ஸ்வரங்கள் ஆரோஹணத்திலோ அவரோஹணத்திலோ இல்லாத ராகங்களாயிருக்கின்றன. மேலும் அநேக ராகங்களில் சுலோகத்தில் ஒரு விதமாய் ஆரோஹண அவரோஹணங்களும் பாடுங்காலத்தில் ஸஞ்சாரத்தைக் கவனித்தால் அதுவேறுமாதிரியாயும் இருக்கிறது. மேலும் தேவகாந்தாரி

என்று இரண்டு ராகங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அது என்ன காரணத்தாலோ? இந்த விஷயத்தை எல்லாம் கவனித்தால் அவரது சாஸ்திர புஸ்தகங்கள் எவ்வளவு ஸங்கீதம் அப்பியஸிப்பவருக்கு உபயோகமாகும் என்பதை அறியமுடியவில்லை.

## ராகங்கள்:

ராகம் என்றால் பிரியம் என்று அர்த்தம். ஸ்வரங்கள் அநேக மாதிரியாய் தொகுக்கப்படுவதால் சுகத்தைத் தருகின்றன. அப்படிச் சுகந்தரும் ஸ்வரத் தொகுதிகளுக்கு ராகம் என்று காரணப் பெயரிட்டிருக்கிறார்கள்.

இந்த ராகம் என்னும் விஷயம் கர்நாடக ஸங்கீதத்தினருக்கே உரியது. இது வேறு விதமான ஸம்பிரதாயங்களில் கிடையாது. ஹிந்துஸ்தானி ஸங்கீதத்தில் ஸாஹித்யங்கள் மட்டும் பாடுவது வழக்கத்தில் வெகு நாளாய் உள்ளது. ராகம் பாடுகிற ஸம்பிரதாயத்தை இப்போது தான் பெரிய கவாயிகள் வித்தை இருக்கிறதென்பதற்கு அடையாளம் என்று எண்ணிப் பாட ஆரம்பித்திருக்கிறார்கள். ஐரோப்பியர்களுக்கு இந்த வழக்கம் தெரியாத விஷயம் என்று மேலே சொல்லிவிட்டோம். ஆகவே ராகம் என்பது என்ன என்று அறிய வேண்டுவோன் கர்நாடக வித்துவான்களைத்தான் கவனித்துத் தெரிந்து கொள்ளவேண்டியது.

மேலும், இந்தராகம் என்னும் விஷயம் கர்நாடக ஸங்கீதம் எங்கே ஜாஸ்தியாய்க் கேட்டாநந்திக்க இடமுண்டோ அவ்விடங்களில் தான் நன்றாய் அறிகிறதற்குச் சந்தர்ப்பம் நேரிடும். அதாவது காம்போதி என்னும் ராகத்தைப் பாடுவதற்கு ராஜமஹேந்திரபுரம் முதல் கந்யாகுமாரி வரையில் பாடகர்கள் உண்டென்றாலும் கர்நாடக ஸங்கீதத்துக்குப் பிறப்பிடமான தஞ்சாவூர் ஸமஸ்தாநத்தில் தான் அதின் வாஸ்தவமான ஸ்வரூபம் அறியப்பட இடமுண்டு. மொத்தமாய் ஸங்கீத விஷயங்களை நிஜமான நிலையில் பார்க்கவேண்டுமென்றால் தஞ்சாவூர் ஸமஸ்தானத்தில் தான் காணலாம்.

ராகம் பாடும் வழக்கம் பாடுவோரிடம் ஆதிகாலந்தொட்டு இருந்ததாகத் தெரியவில்லை. முதலில் ஏற்பட்டது கீதி என்று பெயர்வழங்கிய ஸாஹித்யங்கள் தான். படித்த வித்துவான்கள் ஈசுவரனைக் கீதிகளால் துதித்தார்கள். அம்மானை ஆடும்

குழந்தைகளும், கழற்சிக்காய் ஆடும் குழந்தைகளும் அந்தந்த வேலைகளுக்குத் தகுந்த அம்மானை கழற்சிக்காய்ப் பாட்டுகளை ஏற்படுத்திவைத்திருந்தார்கள். அதேமாதிரி கீழ்ச்சாதியார் முதல் மேல்ஜாதியார் வரையில் அந்தப்படி வேறு வேறு விதமான ஸாஹித்யங்களை ஏற்படுத்திக்கொண்டு ஸங்கீதத்தை அநுபவித்துக்கொண்டுவந்தார்கள். இப்படிக் கொஞ்சகாலம் சென்றபின், புத்திநுட்பமாயிருந்த சிலர் அந்தந்த வேறு வேறான பாட்டுகளை ஒருவாறாகவே முற்றிலும் கற்றுக்கொண்டார்கள். அதில் உள்ள ஒற்றுமைகளையும் வித்தியாசத்தையும் கண்டறிந்து அந்தந்த ஊர்களிலிருந்து வந்த பாட்டுக்களுக்கு அந்தந்த ஊர்களின் பெயர்களை வைத்தார்கள். அந்த ராகங்களுக்கு ஸங்கீத சாஸ்திரத்தில் தேசாங்கராகங்கள் என்று பெயர் வழக்கத்திலிருக்கிறது. உதாரணமாக, குறிஞ்சி என்னும் ராகம் குறிஞ்சிநாட்டு ராகமாம். மாளவி என்பது மாளவ தேசத்தில் உள்ள பாட்டுக்களின் ராகமாம். இதேமாதிரி குர்ஜரி, பங்காளா முதலிய ராகங்களின் பெயர்களிலிருந்தே அவை அவை எந்தெந்த ஊர்களில் பாடப்பட்டுள்ளவையென்று அறிந்துகொள்ளலாம். (இன்னும்வரும்.)

**P. S.** ஸுந்தரமய்யர். B. A. L. T.

---

# "அச்சுதராயாப்பியுதயம்" என்னும் அச்சுதராயர் சரித்திரம்.

விஜயநகரத்தில் அரசாண்ட துளுவராஜர்களின் வம்சவிருட்சம்.

திம்மன் மனைவி தேவகி.

|

ஈசுவரன் மனைவி புக்கம்மா

|

நரசிங்கன் மனைவிகள் (1) திப்பம்மா (2) நாகம்மா (3) ஓபம்மா. திம்மன்

|

(திப்பம்மாளிடத்தில்) வீரநரசிம்மன்

(நாகம்மாளிடத்தில்) கிருஷ்ணராயர்

(ஓபம்மாளிடத்தில்) அச்சுதராயர் மனைவி வரதம்மா

|

சின்னவேங்கடாத்திரி

அச்சுதராயாப்பியுதயம் என்னும் நூல் ராஜநாதகவியால் வடமொழியில் பன்னிரண்டு சர்க்கங்களால் காவிய ரூபமாக அமைக்கப்பட்டுளது. அது அறுநூற்றெழுபத்தைந்து சுலோகங்களையுடையது. அந்நூலாசிரியர் 16-வது நூற்றாண்டினது துவக்கத்திலிருந்தவர். அப்பயதீட்சிதருடைய காலந்துக்கு முந்தியிருந்தவர். அவர் எழுதிய அந்நூல் அவரது காலத்தில் விஜயநகர ராஜ்யத்திலரசாண்ட நரசிங்க வம்சம் எனப்படும் துளுவ வம்சத்தரசரான அச்சுதராயரைப் பற்றியது. ஆனது பற்றியே அச்சுதராயாப்பியுதயம் என்னும் பெயர் பெற்றுளது. அந்நூல் இதுகாறும் அபூர்வமாக ஏட்டுப்பிரதிகளில் இரண்டொரு இடங்களில் காணப்பட்டதேயல்லாது, எவராலும் அச்சிடப்பட்டு வெளிக்கு வந்ததில்லை. சரித்திரவாராய்ச்சிக்கு முக்கிய ஸாதனங்கள், ஆங்காங்கு மறைந்து கிடக்கும் சிற்சில ஏட்டுப்பிரதிகளும், ஆங்காங்கு காணப்படும் சிலா சாஸனங்களும் தாம்பிரசாஸனங்களுமே. ஆதலின் சாஸனங்களில் காணப்படும் விஷயங்களை வெளியிடுவதுபோல, ஏட்டுப்பிரதிகளினின்றும் கண்டெடுக்கப்பட்ட அருமையான விஷயங்களை வெளியிடுவது தேவை. ஆனதுபற்றியே அந்நூலிற் காணப்படும் சரித்திர சம்பந்தமான விஷயங்களை ஒருவாறு ஒன்றாய்த் திரட்டி, இங்குரைக்கத் துணியலாயிற்று.

நற்காலவசத்தால் நாளடைவில் முன்னுக்குவந்து, பிறகு திடீரென அரசராகி, அரசாட்சி செலுத்தத்தலைப்பட்ட பிற்காலத்தவர்களில் பலரும், தம்மை சூரியகுலத்தரசரென்றும், சந்திரகுலத்தரச ரென்றும், அக்கினிகுலத்தரச ரென்றும் சொல்லிக் கௌரவப்படுத்திக் கொள்வது காலப்பழக்கத்தாலேற்பட்ட நம்தேசவழக்கம். அவ்வழக்கத்தையே அநுசரித்து, அந்நூலாசிரியரும் விஜயநகர ராஜ்யத்தில் அரசாண்ட துளுவ வம்சத் தரசர்களை சந்திர வம்சத்தரசர்களென் றேற்றிச் சொல்லி, புராணங்களில் காணப்படும் சந்திரன், புதன், புரூரவா, ஆயு, நஹுஷன், யயாதி, துர்வஸு என்ற சில பெயர்களை அவ்வம்சத்தார்களின் பூர்வ புருஷர்களாக அடுக்கி, பிறகு அவ்வம்சத்தார்களின் பெயர் தெரியாதவராய், "அவ்வம்சத்தில் அநேக அரசர்கள் அரசாண்ட பிறகு திம்மன் என்றொரு அரசன் தோன்றினன்" என்று கூறினர். திம்மனுடைய மனைவி தேவகி. அவர்களுடைய மகன் ஈசுவரன். வீரனுக்கே வசப்படு

பவ்வளான திருமகள், அக்காலத்தில் ஒருவரைவிட் டொருவராய்ப் பலரிடத்தும் ஏகி, ஒருவரிடத்தும் நிலைபெறாது, அங்குமிங்குமாய் அலைந்து திரிந்து கொண்டிருந்து, இவ்வரையடுத்து நிலைபெற்றாள். இவர் மனைவி புக்கம்மா. இவர்களுக்கு நரசிங்கன் திம்மன் என்றிரண்டு புத்திரர்கள். நரசிங்கன் நீதிநிபுணன். குடிகளைத் தன்வயப்படுத்திக் கொண்டனன். தன்னோடு முரண்ட மாநவதுர்க்கத்து நிஜாமையும், அவன் கோட்டையையும் பிடித்துக்கொண்டனன். நிஜாம் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளவே, அவனை விடுத்து மாநவதுர்க்கக் கோட்டையையும் கொடுத்துவிட்டனன். காவேரியாற்றை அணைகட்டிக்கடந்து, ஸ்ரீரங்கபட்டணத்தைப் பிடித்துக்கொண்டனன். இறுமாப்பு மேலிட்டிருந்த மறவனைக்கொன்று மதுரையைக் கொண்டனன். திரண்ட யானைப்படையைத் திரட்டிக்கொண்டு, கோனேடிராஜன் தன்னை வழியில் வந்து வளைந்துகொண்டெதிர்க்க, அவன் சைனியங்களை விரட்டியோட்டி, அவனைக் கைப்பிடியாகப் பிடித்துக்கொண்டான். விஜயநகரத்தைத் தனக்கு நூதன ராஜதானியாக ஏற்படுத்திக்கொண்டான். பிறகு அவ்விராஜதானியிலேயே சில மங்கையரை மணந்தான். அவர்களில் திப்பம்மா நாகம்மா, ஓபம்மா என்பவர் மூவர் பட்டத்தரசிகளானார்கள். திப்பம்மாளுடைய புத்திரர் வீரநரசிங்கராயர். நாகம்மாளின் புத்திரர் கிருஷ்ணராயர். ஓபம்மாளின் குமாரர் அச்சுதராயர். அச்சுதராயாப்பியுதயத்தின் கதாநாயகர் இவரே. இவர்கள் மூவரும், அரசர்கள் கற்கவேண்டுவனவெல்லாங் கற்று, இராஜதர்ம நிபுணர்களாகி, பாலியம் நீங்கி யௌவனம் பெற்றவுடனே, தக்கவயதில் அவரவர்களுக்குத் தந்தை விவாகஞ்செய்து வைத்தனர். தற்காலத்திலும் புருஷர்கள் பல ஸ்திரீகளை விவாகஞ்செய்து கொள்ளுகிறார்களென்றால், முற்காலத்திய அரசர்களைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? அச்சுதராயருக்குத் தந்தையே பல ஸ்திரீகளை விவாகஞ் செய்வித்தனர் அவர்களில், ஸகளராஜனுடைய குமாரத்தியாகிய வரதம்மாள் அச்சுதராயருடைய அதிகமான பற்றுக்குப் பாத்திரமாயினள். இவ்வாறு மக்களெல்லாம் தக்க பிராயமடைந்து, ஒற்றுமை நிறைந்து, அரசிலக்கணங்களெல்லாம் நன்கமைந்து விளங்கியிருக்கக்கண்ட நரசிங்கராஜன், ஜ்யேஷ்டாநுக்கிரமமாக வரிசைதப்பாமல் அவர்கள் தமது விஸ்தாரமான இராஜ்யத்தை நெடுநாள் ஆளக்கூடுமென்று நினைந்து மனங்களித்தனர். தந்தைக்குப் பிறகு, ஜ்யே

ஷ்ட புத்திரரான வீரநரசிங்கராயர் ராஜ்யமடைந்தார். ராஜ்யமடைந்ததும், சிறையிலிருந்த அரசர்களை அவர் சிறை நீக்கினார். அவர் தக்கோர்களான பிராமணர்களுக்கு அநேக நன்கொடைகள் அளித்து, அவர்கள் வறுமையை அகற்றினர். கிருஷ்ணராயர் பகையரசர்கள் தம்தம் இருப்பிடம் விட்டுத் தலைகாட்டாவண்ணம் காத்தனர். வீரநரசிங்கராயருக்குப் பிறகு அவரது அடுத்த தம்பியாகிய கிருஷ்ணராயர் ராஜ்யம் வகித்தனர். கிருஷ்ணராயர் கோண்டவீடு முதலான பல கோட்டைகளைப்பிடித்தும், கஜபதிநாட்டிற் சென்று வெற்றிபெற்று ஜயஸ்தம்பம் நாட்டியும், பிரக்கியாதிபெற்ற மகாவீரர். அவருக்குப் பிறகு மந்திரிகள் அச்சுதராயருக்கு முடி சூட்டத் தீர்மானித்தனர். முதலில் அச்சுதராயர் திருப்பதிக்கோயிலில் எம்பெருமான் திருவடிகளைச் சேவித்து, அவரது கையிலுள்ள சங்குத் தீர்த்தத்தால் அபிஷேகஞ் செய்யப்பெற்றனர். பிறகு, வித்தியாநகரிக்கு (விஜயநகரத்துக்கு) ஏகி, வழக்கப்படி அவ்விடத்தில் முடிசூட்டுமகோற்சவத்தை வெகு சிறப்பாக நடத்தப்பெற்றனர். ஸகளராஜன் குமாரத்தியான வரதம்மாள் அரசருடன் பட்டாபிஷேகஞ் செய்யப்பெற்றனள். அச்சுதராயருக்கு வரதம்மா தேவியிடத்துப் பிறந்த புத்திரனை சின்ன வேங்கிடாத்திரிக்கு இளவரசுப்பட்டஞ் சூட்டப்பட்டது. இவ்வாறு முடிசூட்டுமகோற்சவம் நடத்தப்பெற்று, அச்சுதராயர் தம் பட்டத்து ராணியுடனும் இளவரசனுடனும் சுகித்திருந்தார்.

கார்காலம் நீங்கிக் கூதிர்காலம் வந்தது. ஒருநாள் அரசன் வேங்கடவிலாஸ மண்டபத்தில் சிங்காதனத்தில் வீற்றிருந்து, ராஜரீக காரியங்களை முடித்து, வந்திருந்த பாளயப்பட்டிபதிகளை விடைதந்தனுப்பி, மந்திரியுடன் தனிமையில் இருந்தான். அப்பொழுது மந்திரி அரசனை நோக்கி, “மகாராஜனே, எல்லாமுணர்ந்த தங்களுக்கு விசேஷமாக எம்போல்பவர்களால் உணர்த்தப்படவேண்டியதொன்றுமில்லை. ஆயினும் சமயங்களில் சில சமாசாரங்களை மந்திரிகள் அரசர்களுக்குத் தெரிவிக்கவேண்டியது அவர்களின் கடமை. ஆகலின் நான் தெரிவிப்பதைக் கேட்பீர்களாக. பகைவரைப் பலவீனர்களென்றெண்ணி, அசட்டைபண்ணி, கவலையற்றிருத்தல் கூடாது. சிவபெருமான், கடைசியில் ஒருவித உதவியையுமெதிர் பாராது, புஞ்சிரிப்பினால் திரிபுரர்களைச் சுட்டெரித்து

நீருக்கினாரென்றாலும், சண்டை தொடுக்கப் புகுங்கால் எத்தனையோ சன்னாகங்களுடன் சென்றாரன்றோ? உலகத்தில் ஸாமோபாயத்தால் வயப்படுபவர் சிலர். தண்டோபாயமொன்றிற்கே வழிப்படுபவர் சிலர். பக்கத்தில் நின்று ஸ்திரீகள் இனிய வார்த்தைகளாட, அவர்களுடைய நன்மொழிகளால் நறுமலர்களைப் பூக்கும் மரங்கள் சில. அவர்களது பாததாடனங்கள் பெற்றே நறுமலர்களைப் பூத்துச்சொரியும் மரங்கள் சில. நம்பிக்கையுள்ள வேவுகாரர்களைக்கொண்டு வேற்றரசர்களின் பலாபலங்களை நன்றாயறிந்து, பிறகு அவர்களுடைய நாட்டிற்குள் பிரவேசிப்பவர் வெற்றி பெறுவார். தண்ணீரில் தடியை ஊன்றி ஆழமறிந்து அடிவைப்பவர் அக்கரை யேறுவர். புத்திநுட்பமுடையவன், சத்துருக்களை ஒருவர்க்கொருவர் கலகப்படுத்தி அவர்களின் கூட்டுறவைக் குலைத்து, அவர்களை ஒருவர்க்கொருவ ரடித்துக்கொண்டு மடியச்செய்வன். காற்று கானகத்திலுள்ள மரங்களை ஒன்றுக்கொன்றுரையச்செய்து, தீமூட்டி, அதனால் அவைகளையெல்லாம் எரிந்துபோகச்செய்யும். ஜடாத்மாவுக்கு இதமொழி எவ்வளவுதான் உரைப்பினும் அவன் இணங்கிவரமாட்டான். அப்படிப்பட்டவனை யறிந்து, புத்திசாலியாயுள்ளவன் அடித்துப் புடைக்கவே, முன் சொன்ன அவன் உடனே அடங்கிவிடுவான். ஸ்ரீராகவனுக்கு நயத்தினால் முதலில் இணங்கி வராதிருந்து, பயத்தினால் பிறகு உடனே பணிந்துவந்த சமுத்திரராஜனே இதற்கு திருஷ்டாந்தம். மேலும், புதிதாகப் பட்டமடைந்த அரசன் தம் நகரத்தில் பவனி உலாவுவதுபோல, பூமி முழுவதையும் சுற்றிப்பார்த்தல் வேண்டும். அப்பொழுது தான் அவனுடைய கீர்த்திப் பிரதாபங்கள் எங்கும் வெளிச்சமாகப் பிரகாசிக்கும். இரணகளங்களில் சத்துருக்களின் சைனியங்களைப் பலிகொடுத்துப்பேய்க் கூட்டங்களுக்குத் திருப்திபண்ணி வைக்கின், மிகச்சிறந்ததான "புகழ்" எனும் நிதிகிடைக்கும். கூதிர்காலம் வர, திருமகள் தாமரை மலர்களில் விளையாடுவதுபோலத் தங்களைச் சார்ந்து விளங்கினும், கெடுகாலம் நெருங்கிய மேகங்களுக்கொப்ப, சிற்சில சிற்றரசர்கள் கப்பஞ்செலுத்துவதை நிறுத்திவிட்டனர். தோல்வியடைந்து மாறுவேஷம்பூண்டு நாட்டைவிட் டோடிப்போன சோழன், சேரனைச்சார்ந்து அவன் சார்பிலிருக்கிறான். அச்

274



சோழனையும் அவனுக்கிடங்கொடுத்த சேரனையும் ஒருங்கே தண்டிக்கவேண்டியது சாலவொழுங்காம். சேரன் கொஞ்சங் கொஞ்சமாக எல்லை கடந்து பாண்டிய நாட்டைச் சேர்த்துக் கொண்டனன். பண்டைக் காலந்தொடங்கிப் பாண்டிய நாடென் றெவருமறிந்த தன்னாட்டை யிழந்தனன் பாண்டியன். துஷ்டர்களைச் சிட்சித்துச் சிட்டர்களை இரக்ஷிப்பது அரசு நடத்துமுறையென்பது தங்களுக்குத் தெரிந்த விஷயம்.'' என்று விநயமாகத் தெரிவித்தனன்.

(இன்னும் வரும்.)

**T. S. குப்புஸ்வாமி சாஸ்திரிகள்.**

---

# பூகம்பமும் எரிமலையும்.

(129-ம் பக்கத்தொடர்ச்சி.)

சில எரிமலைகள் கொஞ்சகாலம் கற்குழம்பைக் கக்கியபிறகு அடங்கிவிடும். அப்படி அவைகளடங்கி விடுவதற்குப் பல காரணங்களுண்டு. பூமியின்கீழ் உண்டாகிய உருகிய வஸ்துகள் சடுதியிலுண்டாகிய குளிர்ச்சியால் இறுகிவிடும். அப்படி இறுகினால் எரிமலை கற்குழம்பைக் கக்காமல் அடங்கிவிடும். பூமியின் உட்பிரதேசத்திலுண்டாகிய கற்குழம்பை எரிமலைகள் முற்றிலும் வெளியேற்றிய பிறகு அம்மலைகளின் றொழில்கள் நின்றுவிடும். சில சமயங்களில் அம்மலைகளின் கிரேட்டர்களிடத்தில் விழுந்த கிட்டங்களினாலும் மழைபாற் கரைத்து அவைகளிடத்தில் சேர்க்கப்பட்ட வஸ்துக்களினாலும் அம்மலைகளின் கிரேட்டர்கள் மூடப்படுவதால் அவைகள் அடங்கிவிட்டனபோல் கொஞ்சகாலத்திற்குத் தோற்றும். அடிக்கடி சம்பவிக்கும் பூகம்பங்கள் பழைய கிரேட்டர்களையும் அம்மலைப்பக்கங்களையும் அழித்து, புதிய எரிமலைக்குன்றுகளை அடியிலும் பக்கங்களிலும் உண்டுபண்ணுகின்றன. இதற்குத் திருஷ்டாந்தமாக இத்தாலியா தேசத்து மிக நாகரீகமடைந்த பட்டணமாகிய நேப்பிள்ஸ் நகரத்திற்கருகிலுள்ள விஸுவியஸ் என்னும் எரிமலையைப்பற்றிப் பேசுவோம். அது 1756-ம் ஹு த்தில் பல கிரேட்டர்களைக் கொண்ட மூன்று முடிகளையு

டைய ஒரு எரிமலையாகப் புலப்பட்டது. அதுவே 1767-ம் ஹூத்தில் அம்முடிகளெல்லாம் அழிந்து ஒரு பெரிய கிரேட்டரின் அடியினின்றும் புதிதாயுண்டாகிய ஒரேமுடி மலையாகக் காணப்பட்டது. ஒரு எரிமலை எவ்வளவு விதமாக மாறுபாட்டை அடைக்கூடியதென்று இம்மலையின் விருத்தாந்தத்தால் எவருக்கும் நன்கு விளங்கும்.

இம்மலை இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் ஒரு சாதாரணமான மலைக்குன்ருகக் காணப்பட்டது. அது ஒரு சர்க்கரை பொட்டணத்தின் வடிவுகொண்டதாயும் அதன் மேற்பாகம் ஒன்று அல்லது ஒன்றரைமயில் விஸ்தீரணத்தையுடையதாகவு மிருந்தது. அதன் வடிவத்தினுல் ஒருவரும் அதை அக்காலத்தில் ஒரு எரிமலை என்று ஊகிக்க இடமில்லை. அதன் மேற்பக்கங்களிலும், சாரல்களிலும் திராக்ஷக்கொடிகளும் வேறு சில பலந் தரும் வல்லிகளும் மிகச் செழித்துத் தளிர்த்துத் தழைத்து வளர்ந்தன. கிரிஸ்து பிறப்பதற்கு எழுபத்திரண்டு வருஷங்களுக்குமுன் இத்தாலியா தேசத்தில் சர்வயில் யுத்தம் (Servile War) நேரிட்டபோது ஸ்பார்ட்டகஸ் என்னும் வீரன் ஆண்மையும் அஞ்சா நெஞ்சமும் திடசரீரமுங் கொண்ட வீரர்களடங்கிய சிறிய படையுடன் அம்மலையைத் தனக்கு ஓர் அரணுகக்கொண்டு அதில் தங்கினன் என்று அத்தேச சரித்திரக்காரர்கள் கூறி இருக்கிருர்கள். அது ஒரு எரிமலை என்று அறிந்திருப்பாணுகில் அப்படி அங்குத் தங்கி இருக்கமாட்டான். இரண்டு சேனைகள் யுத்த கோலம்பூண்டு அமர்க்களம் புகுந்து சமர் தொடங்குமுன் இடிபோல் பலமுறை அவர்களால் பறைகள் சாற்றப்படுவனபோல், அக்கினிமலை கற்குழம்பைக் கக்குமுன் அதற்கு ஓர் அறிகுறியாகப் பலகால் பூகம்பப் பறையொலி இடுமென்று முன்னரே கூறினேம். அதற்கு இணங்க அம்மலையின் அருகாமையில் வசித்தவர்கள் கிரிஸ்து பிறந்து 63-ம் வருஷத்தில் பல தடவைகளில் பூகம்ப அதிர்ச்சி நேரிட்டதென்றும், அது முதல் வருஷம் ஒன்றுக்குப் பலதடவையாக வருஷம் தவருமல், 16 வருஷங்கள் பூகம்பம் நேரிட்டதென்றும் பிரசுரிய எழுதிவைத்தார்கள்.

(இன்னும்வரும்)

K. இராமாநுஜ ஐயங்கார்.

# கம்பநாடகம்.

மதுரைச் "செந்தமிழ்" என்னும் பத்திரிகையில் அதன் அதிபராயினார் கம்பநாடுடையாரால் இயற்றப்பட்ட தமிழ்ப் பெருங்காப்பியமாகிய ஸ்ரீராமகதைக்கு இராமாவதாரம் என்பது பெயரென்றும் இவ்வுண்மை,

நடையி னின்றுயர் நாயகன் றோற்றத்தி
னிடைநிகழ்ந்த இராமாவதாரப்பேர்த்
தொடைநிரம்பிய தோமறு மாக்கதை
சடையன் வெண்ணெய் நல்லூர் வயிற்றந்ததே.

என்னுஞ் சிறப்புப்பாயிரத்து இறுதிச் செய்யுளானும் புறத்திரட்டு என்னுந் தொகைநூலில் அதன் ஆசிரியர் கம்பநாடரது பாக்களை யெடுத்தாளு மிடங்களிலெல்லாம் இது இராமாவதாரம் என்று வரைந்திருத்தலினானும் நன்கறியக் கிடக்கின்றதென்றும், கம்பராமாயணம் என்னும் வழக்காறு பிற்காலத்ததென்றும் தமக்குத் தோற்றிய சில ஏதுக்களைக்காட்டி யெழுதியிருந்தார்.

பத்திராதிபர் காட்டிய பாயிரச் செய்யுளில் வந்துள்ள "இராமாவதாரம்" என்ற தொடரை நூற்குப் பெயராகக் கொள்ளின் அச்செய்யுளின் எஞ்சிய பகுதிக்கு இயையப் பொருள்காண்பது அரிதாகின்றது.

மற்றொரு சாரார், இத்தொடர்நிலைச் செய்யுட்கு "இராமன் கதை" என்பது பெயராமென்றும், இவ்வழக்கு,

ஓசை பெற்றுயர் பாற்கட லுற்றொரு
பூசை முற்றவு நக்குபு புக்கென
ஆசை பற்றி யறையலுற் றேன்மற்றிக்
காசில் கொற்றத்து இராமன் கதையரோ—என்ற

செய்யுளில் நூலாசிரியர் சுட்டிக்காட்டி யிருத்தலானும்,

நம்பநாடன்னுமை செவிசாற்றுபூங்
கொம்பநாடன் கொழுந னிராமப்பேர்ப்
பம்ப நாடழைக்குங் கதைபாச்செய்த
கம்பநாடன் கழறலையிற் கொள்வாம்—என்ற

செய்யுளில் பிற்காலத்தாரும் இராமன்கதை என்பதே இந்நூற்குப் பெயரென்பது விளங்க அனுவதித்திருத்தலானும்

உணரக்கிடக்கின்றதென்றும் உரைப்பாராயின் அவ்வுரையை மறுக்குமாறு எப்படி?

பின்னை, இவ்விதிகாசத்திற்கு முதனூலால் வந்த இராமாயணம் என்னும் பெயர்தவிர மற்றும் வேறு பெயரிருந்ததோவெனிற் கம்பநாடகம் என ஆக்கியோன் பெயரானே வந்ததோர் பெயரிருந்ததாமென்க.

மிகப் பிரசித்தியுடையவராய பெரியோர் சிலரை அவர் குடும்பத்தாரிட்ட பெயரா னழையாமல், பிறந்த ஊர், செய்த காரியம் முதலியவற்றைக் காரணமாகக் கொண்ட வேறு நாமங்களால் வியவகரிப்பதோர் வழக்கம் பற்றி இக்கவிச் சக்கிரவர்த்தியையும் கம்பநாடகர் என அவர் விளங்கிய கம்பநாட்டால் வந்த பெயரால் வியவகரித்து வந்தார்கள். இதனை "கம்பநாட்டாழ்வான்," "கம்பநாடன்" "கம்பநாடுடைய வள்ளல்" என வருவனவற்றைக்கண்டு தெளிக.

தொல்காப்பியக்குடி என்னும் ஊரிற் பிறந்தோருக்குத் தொல்காப்பியர் என்றும் அவரியற்றிய நூலுக்குத் தொல்காப்பியமென்றும் பெயர் வந்தவாறுபோலக் கம்பநாட்டகத்தையுடைய இம்மகா கவிக்குக் கம்பநாடகர் என்றும், இவரியற்றிய நூலுக்குக் கம்பநாடகம் என்றும் பெயர் வந்தது முறையேயாமென்க.

திருவாய்மொழி முப்பத்தாறாயிரப்படியில் "தீமுற்றத் தென்னிலங்கை யூட்டினான்—இராவண பயத்தாலே முன்பு அரைவயிறாக ஜீவித்த அக்கினி 'ஒள்ளெரி மண்டியுண்ண' என்கிறபடியே வயிறு நிறையவுண்டு ஜீவிக்கப் பெற்றதாயிற்று பெருமாளை யண்டை கொண்ட பலத்தாலே. 'நெருப்புத் தின்று தேக்கிடுகின்றது' என்னக்கடவதிறே" என்ற வடக்குத் திருவீதிப்பிள்ளை யீட்டையும்,

"என்றுகொல் குரங்கன்ன திவ்வலியுள திலங்கை
நின்று வெந்துமா நீறெழுகின்றது நெருப்புத்
தின்று தேக்கிடு கின்றது தேவர்கள் சிரிப்பார்
நன்று நன்றுபோர் வலியென விராவணனக்கான்"

இது கம்பநாடகம் என்ற ஆத்தான்ஜீயரும், குணகரப்பாக்கம் இராமாநுஜஜீயரும் வகுத்த அரும்பத வுரைகளையும்

நோக்குமிடத்துத் தமிழ்ப்பெருங் காப்பியமாகிய ஸ்ரீராமாயணத்திற்குக் கம்பநாடகம் என ஒரு பெயரிருந்தென நன்கு புலப்படுகின்றது காண்க.

**P. R.** கிருஷ்ணமாசாரியர்.

---

# பதிற்றுப்பத்து-உரை.

## செய்யுள் (௫௩)

துறை—செந்துறைப்பாடாண் பாட்டு.

வண்ணம்—ஒழுகு வண்ணம்.

தூக்கு—செந்தூக்கு.

இவற்றின் பொருளை (௫௩)ம் செய்யுள் உரையிற் காண்க.

பெயர்—நிரையவெள்ளம்—பகைவர்க்கு நிரயபாலரைப் போலும் படைவெள்ளம் என்ற சிறப்பானே இதற்கு இப் பெயர் ஆயிற்று.

1-2. யாண்டு—சீற்றமொடு:—நீ, செல்லவேண்டிய இடத்திற்குச் சென்று, பகைப்புலத்தை யழிக்கும் பொருட்டு, நெருங்குதற்கரிய கோபத்தோடு,

3. மழை—முருக்கி:—மேகங்கள் தவழ்கின்ற உச்சியை யுடைய மதிலையும் கொடியாடு மரத்தையுமழித்து,

4-5. நிரை—அறுப்ப:—கூட்டமான யானைகள் ஒழுங்கிரகச் சென்ற படைவெள்ளம், பரவித் திரிகின்ற கணக்கற்ற அரசர்களின் ஒழுங்கை யறுக்கவேண்டி,

6-7. கோடிவிடு—கெடுத்து:— கொடிபோல் எழுகின்ற நிறம் பொருந்திய புகை திவலையாகச் சிதறக்காற்று மோத நெருப்பெரிந்து அழித்த இடத்தைப்போல வடிவு நீங்கும்படி அழிக்க.

8. தோல்—வைப்பின்:—அதனால் பழமையான அழகழிந்த அகன்ற இடத்தினையும்,

9-13. வெண்பூ—வைப்பின்:—வெள்ளிய பூக்களையுடைய வேளையும் பசிய சுரையுந்தழைக்க, பீர்க்கின் செறிவுபரந்த,

நீரற்ற மேவலையுடைய சிவந்த காந்தள் நிறைந்த உருவழிந்த பழமையான வீடுகளை யுடைய, புலால் நாற்றமிருந்த வில்லாகிய ஏரையுடைய புன்றொழிலாளராகிய ஆறலைகள்வர் சஞ்சரிக்கின்ற புல்லிய இலைகளாலே வேயப்பட்ட ஊரினையும், உடைய,

13-15. புலர்சிதை—வந்திசின்:— இடமழிந்த, குறும்பாலும் அறியாமையாலும் வலிமை மறந்து எதிர்த்த நின்பகைவர், நாடும் கண்டுவந்தேன்.

16-21. கடலவும்—வேறுக்கை:—கடல் பலை ஆறு முதலிய இடங்களிலுள்ள பல வளங்களாலும் நிறைந்த அகலத்தை இடத்தே யுடைய நல்ல நாட்டின் கணுள்ள, விழா நீங்காத ஓசை மிகுந்த பழமையான ஊரின், கொடியின் நிழற்பட்ட அழகு மிகுந்த இடத்தின் கண், வெற்றிப் புகழ்பெற்று, மிக்க மகிழ்ச்சியானே ஒலிக்கின்ற, முரசினையுடைய வீரர்களுக்கு வேந்தே, பரிசிலர் செல்வமே,

22-23. தாரணிந்து—சேரலாத:—மாலையை யணிந்து அதனால் அழகுவாய்ந்த, பூண் அணிந்த மருப்பையுடைய போரில் வல்ல, யானைச் சேனையையுடைய அரசனே,

21-26. நீவாழியர்—வாழ்த்த:— பழைய நாவினையும் மென் சொல்லினையு முடைய கலப்பையர் இவ்வுலகத்தோர் ஆக்கத்தின் பொருட்டு நீ வாழ்வாயாக வெனச் சொல்லித் திருந்திய நரம்புத்தொடையையுடைய யாழால் வாழ்த்த,

27. வெய்துற—வாழ்க்கை:— துன்பமறியாது ஆக்கமிகுந்த வாழ்க்கையினையும்,

29. ஒன்று—கொள்கை:— வஞ்சினங்கூறி அடங்கிய கொள்கையினையும்,

31. நிரையம்—புரையோர்:—பகைவர் படை வெள்ளத்தைத் துரந்திய வேட்கையையுமுடைய மேலோர்.

28 செய்தன—சுற்றமோடு:— செய்த காரியங்களைப் பின் சிதைபாது மேவுதலையுடைய சுற்றத்தாரோடு,

30. என்றும்—எய்தி:—என்றும் ஊரிலுள்ளவர்கள் துன்பம் அறியாவண்ணம், புசித்து,

32. மேயினர்— உறையும்:—கலந்து வாழ்கின்ற

**32-34.** பலர்புகழ்—மருண்டனென்: —பலரும் புகழ்கின்ற பண்பையுடைய நீ பாதுகாத்தலால் நோய் நீங்கியதும், ஆன, அழகிய நல்ல நாடும் கண்டு மதிமருண்டேன்.

(இவை யிரண்டும் காணவேண்டின காரணம் யாதெனின்,)

**35-40.** மன்னுடை—நயந்தே:—பூமியின் வாழ்கின்றமாந்தர்கட்குக் குறையாது கொடுத்துக் கையோயாதுமிகுந்த வலிமையோடு; தேவாலயமுள்ள இடங்களிலே உயர்ந்த ஆபரணமுள்ளிட்டவற்றைக் கொடுத்து, பாதுகாத்தலாகிய சிறப்பு மிகுந்த வாழ்வையுடைய திருமாலைப்போன்ற, நல்ல இசை கெடாதமைந்த நின் பல்குணங்களையும் விரும்பி.

(இன்னும் வரும்.)

பண்டிதர், **K. M.** நடேச ஐயர்.

---

# அணங்குகொ லென்னுங் குறள் கைக்கிளைத் திணையே.

(188-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்னுமவர் திருக்கோவையாரிற் காட்சி ஐயந் தெளிதல் நயப்பு என்னும் கைக்கிளைத் துறைகளனைத்தும் கூறுதல் திணைமயக்கமாய் வழுப்படுமாயினும் களவிக்கோவையின்கண் அவை வருங்கால் வளப்புடையவாய்ச் சிறந்து காட்டலின் அமைத்துக்கொள்ளப்படுமென்றார். இனி, ஆசிரியர் தொல்காப்பியனார் இன்ன மெய் இன்ன மெய்யுடன் மயங்குமென்றும் இன்ன மெய்யுடன் மயங்காதென்றுங் கூறிய விதி கடந்து மயங்கின் அம்மயக்கம் வழுவெனப்படுமன்றி விதிப்படி மயங்கின் அம் மெய்மயக்கம் வழுவெனப்படா. அது போலவே ஆசிரியர் 'உரிப்பொருளல்லனமயங்கவும் பெறுமே' என்ற விதிப்படி ஐந்திணையொடு கைக்கிளை பெருந்திணை மயங்கில் அவை திணை

அணங்குகோ லென்னும் குறள் கைக்கிளைத் திணையே ௨௧௩

மயக்கமெனப் பெயர் பெறலன்றி வழூப்படல் யாங்ஙனம்? மயங்கவும் பெறுமே என்ற உம்மையால் ஐந்திணையொடு கைக்கிளை பெருந்திணை மயங்காவிடினும் மயங்குமிடத்துக் கைக்கிளை பெருந்திணையுட் சிறப்பில்லன மயங்காமற் சிறப்புடையன மயங்கினும், சிறப்புடையன மயங்காமற் சிறப்பில்லன மயங்கினும், அவ்விருவகையு மயங்கினும், அவை யெல்லாம் வழூவாகாவென்பதே ஆசிரியர் கருத்தாதலின் அவ்விதி பற்றி, மாறன் பொறையனார் ஐந்திணை ஐம்பதனுள் ஐந்திணையே கூறினார். வாதவூரடிகள் ஐந்திணையோடு காட்சி முதலிய சிறப்புடைக்கைக்கிளை தழீஇ ஏனைய ஆசுர முதலிய சிறப்பிலாக் கைக்கிளை நீக்கி நாண நாட்ட முதலிய அகத் தமிழ்ச்சிதைவாகிய சிறப்புடைப் பெருந்திணை தழீஇ ஏனைய ஏறியமடற்றிற முதலிய சிறப்பிலாப் பெருந்திணை நீக்கிக் கோவை கூறினார். நல்லந்துவனார் ஐந்திணைகூறுங் கலித்தொகையில் முல்லைக்கலி 9-12-13-வது பாட்டில் அடியோர்பாங்கினும் வினைவலபாங்கினுமாய சிறப்பிலாக் கைக்கிளையும் நெய்தற் கலியுட்பல விடத்துச் சிறப்பில்லாதனவாகிய ஏறியமடற்றிற முதலிய பெருந்திணையுங் கோத்தார். இவ்வாற்றாற்றிணை மயங்காது கூறலும் திணைமயங்கக்கூறலும் அது மயங்கக்கூறுமிடத்தும் சில களைந்து சில கூறலுமமையுமென்பது விளங்குமாதலின் கோவையிற் காட்சிமுதலிய கைக்கிளை கூறல் வழூப்படுமெனலும் வழூப்படுமாயினும் சிறந்துகாட்டலின் அமைத்துக்கொள்ளப்படுமெனலும் பொருந்தாமை காண்க.

இவ்வாற்றான் யாதாயினுமொன்று வழூப்படுமாயின் அதனையமைத்தற்கு யாண்டும் ஆசிரியர் ஆணையே காரணமென்பதும் கைக்கிளை மயங்கல் வழூவெனவும் அதனை வனப்புடையவாய்ச் சிறந்துகாட்டுங்காரணத்தானமைக்கவெனவும் ஆசிரியர் கூறிற்றிலரென்பதும் பிள்ளையவர்களே அவ்வாறு கூறினாரென்பதும் அதனாலவ்வுரைகொள்ளற்பாற் றன்றென்பதுமறியப்படும்.

இனி அவர் இதனைப் பேராசிரியர் இனிதுவிளக்கினாரென்றார். வாதவூரடிகள் தமது ஐந்திணைக் கோவையுட் களவிற்கு முன்னிற்றற் பாலவாய துறைகளுட் காட்சி முதலிய கைக்கிளை கூறற்கும் ஏறியமடற்றிற முதலிய பெருந்திணை கூறாமைக்கும் அடிகள் கொண்ட கொள்கைக்கேயே காரணமாத

லன்றி நூல் காரணமாகாதென்ப தறிவித்தற்பொருட்டு அடிகள் வளப்புடைமை நோக்கிக் கைக்கிளை தழீஇயினரென்றும் சிறப்பின்மையிற் பெருந்திணை நீக்கினாரென்றும் பேராசிரியருரைத்தாரன்றி, அவர் கைக்கிளை பெருந்திணை கூறல் வழுவென்றுவது அவற்றை அமைத்தற்கு வளப்புடைமை காரணமென்றுவது கூறிற்றிலர்; உய்த்து நோக்குக.

இனி அவர் பேராசிரியர் பெருந்திணை தழுவுதல் சிறப்பின்மையினீக்கினாரென இனிது விளக்கினாரென்று அவர் கருத்தறியாது கூறினமையானே அவர்க்கு வாதவூரடிகள் பெருந்திணையை முற்றுந் தழீஇயிலரெனல் கருத்துப்போலும். ஆண்டுப் பேராசிரியர் கருத்து ஏறியமடற்றிற முதலிய பெருந்திணையைக் குறித்தன்றி நாணநாடல் முதலிய பெருந்திணையைக் குறித்தன்று. இதனை நாணநாட்ட நடுக்கநாட்டத்துள் அத்துறைகளைப் பெருந்திணையென அப்பேராசிரியர் தாமே எழுதிய வாற்றானறிக. இவ்வாற்றாற் கோவையாரிற் கைக்கிளையேயன்றிப் பெருந்திணை மயங்கலு மறிக.

இனி ஆண்பாற் கூற்றுப் பெண்பாற் கூற்று என்னுங் கிளவியைக் கோவையாக விரித்துக் கூறுந் திருக்கோவைபோலவே திருக்குறளும் அக்கிளவியைக் கோவையாகச் சுருங்கக் கூறலின் வாதவூரடிகள் காட்சிமுதலாயின கூறலமையுமெனலும் வள்ளுவனார் அங்ஙனம் கூறலமையாதெனலும் இலக்கண முறையன்றாதல் காண்க.

இனி அவர் ஆண்டுத் திருவாதவூரடிகள் இயற்கைப் புணர்ச்சி கூறுதலின் அதன் கண் அவ்வாறு கூறற்கமையுமென்றார். அவர்க்குக் குறள் இயற்கைப்புணர்ச்சி கூறவில்லையென்பது கருத்துப்போலும். இயற்கைப்புணர்ச்சி இடந்தலைப்பாடு பாங்கன் கூட்டம் தோழியிற் கூட்டமென நால்வகைத்தாய களவும் ஏனையகற்பும் விரித்துக்கூறுந் திருக்கோவைபோலவே திருக்குறளும் அந்நால்வகைத்தாயகளவையும் ஏனையகற்பையுங் கூறுதலானும் கண்டு கேட்டென்பது முதலிய குறள்கள் இயற்கைப் புணர்ச்சியே கூறுகின்றமையானும் இயற்கைப் புணர்ச்சி இன்றேற்களவெனப்படுவது பிறிதொன்றின்மையானும் ஆண்டுத் திருவாதவூரடிகள் இயற்கைப் புணர்ச்சி கூறுகின்றாராதலின் அதன்கண் அவ்வாறு

அணங்குகோ லென்னுங் குறள் கைக்கிளைத் திணையே யாகு

கூறற்கமையுமெனவே இயற்கைப் புணர்ச்சியின்றி நடைபெறு தகளவொழுக்கத்திற்குமமையுமெனத் தானே போதரலானும் குறளின் கண் இயற்கைப்புணர்ச்சி யின்றெனக்கருதலும் அதனாலமையாதெனலும் பெரிது முரணாதல் காண்க.

இனிநக்கீரனார் விலக்கிய நடுங்கநாட்ட முதலியவற்றை அடிகள் வேறோர் நயம்பற்றி அமைத்தாரென்றார். அந்நயம் யாதோ? அறிகிலன். விலக்கியதற்கும் அமைத்தற்கும் இலக்கணங் கூறல் முறையாவதன்றி நயத்தைப் பொதுவாக்கலும் அதனையுமிதுவெனச் சுட்டியுணர்த்தாது வேறோர் நயமெனக் கூறியொழிதலும் முறையன்மை காண்க.

இனி ஆசிரியர் நாணவு நடுங்கவு நாட்டோழியென ஐந்திணையிலக்கணங் கூறினாராதலின் அவ்விலக்கணத்தின் வழுவிய அந்நாட்டங்கள் செப்பிய வகத்தமிழ்ச்சினையும் பெருந்திணையென்றனையாற் பெருந்திணையாதலன்றி ஐந்திணையாகாமையின் நக்கீரனார் முன்னுறவுணர்தலென்னும் அகத்திணையிலக்கணத்திற்கு நாணவு நடுங்கவு நாட்டலாகிய பெருந்திணை உணர்ச்சியை மறுத்துக்குறிப்புநாட்டலாகிய உணர்ச்சியைப்பொருளாக்கினரேயன்றி ஐந்திணையோடு அப்பெருந்திணையைக் கோத்தல் கூடாதெனவிலக்கிற்றிலர். இவ்வாற்றானவர் விலக்கியவற்றை அடிகள் வேறோர் நயம்பற்றி யமைத்தாரல்லரென்பதும் நாணநாட்டமும் நடுங்க நாட்டமுமாகிய பெருந்திணைமயங்கற்கும் உரிப்பொருளல்லன மயங்கவும் பெறுமே என்ற விதியே காரணமாமென்பதும் இதுவெனச் சுட்டாது அவர் கூறிய வேறோர் நயம் காரணமாகாதென்பதும் அறிக.

இனித் திருக்கோவைபோலவே திருக்குறளும் அந்நான்கு வகைத்தாயகளவும் கூறல் கண் கூடாமாதலானும், திருக்கோவையிற் கைக்கிளை இயற்கைப்புணர்ச்சிக்கு முன்னிகழ்ந்து சிறப்பித்தாற்போலவே திருக்குறளினுமியற்கைப் புணர்ச்சி கூறுதலின் அதற்கு முன்னிகழ்ந்து சிறப்பித்தல் கூடுமாதலானும், கோவையிற் கைக்கிளை இயற்கைப்புணர்ச்சிக்கு முன்னிகழ்ந்து சிறப்பித்தலான் வழுப்படுத்தலில்லை யென்பதூஉம், குறளின்கண் வழுப்படுமென்பதூஉம், வாதவூரடிகள் போலன்றி வள்

ளுவனார் வேறுகூறினாரென்பதும், பரிமேலழகரே ஐயமுதலிய புகுத்தாரென்பதும், அங்ஙனம்புகுத்தது மாறுபாடென்பதும் நூல்வழக்காகாமையறிக.

இனி இயற்கைப் புணர்ச்சி கூறும்வழிக் கைக்கிளைமயங்கலுமாமெனவும் களவியலுள் அவ்வாறு வருதலாகாதெனவும் ஆசிரியர் தொல்காப்பியனார் முன்னைய நான்கு முன்னதற்கென்ப என்னுஞ் சூத்திரத்தாற் கூறினாரென்றார். ஈதென்னை வியப்பு? இயற்கைப்புணர்ச்சியும் களவும் வேறென்பது அவர் கொள்கைபோலும். இயற்கைப்புணர்ச்சியின்றிக் களவெனப்படுவது பிறிதொன்றுண்டோ; யாண்டுமில்லையே. இயற்கைப்புணர்ச்சி களவாகாவிடிற் களவுகற்பெனக் கைகோளிரண்டேயாதலின் அது கற்பெனப்பட்டுப் புலனெறிவழக்கொடுமுரணுமன்றே. இயற்கைப்புணர்ச்சியாகிய களவொழுக்கமின்றேல் ஏனைய இடந்தலைப்பாடு பாங்கன் கூட்டம் தோழியிற் கூட்டமாகிய களவொழுக்கமு நடைபெறலில்லையே. இவ்வாற்றாற் கைக்கிளை யியற்கைப்புணர்ச்சியில் மயங்கல் பொருந்துமெனவே களவின் மயங்கல் பொருந்துமென்பதும் பெறப்படவிற் பின்னுமவர் தாமே அது களவின்கண் மயங்கல் கூடாதெனல் முரணுதல் காண்க.

இனி ஆசிரியர் கைக்கிளை களவியலுள் மயங்காதென அச்சூத்திரத்தேனும் பிறவிடத்தேனுங் கூறிற்றிலர். உரையாளருங்கூறிற்றிலர். அங்ஙனமாகப் பிள்ளையவர்கள் முன்னைய நான்கு முன்னதற்கென்ப என்னுஞ் சூத்திரத்துள் ஆசிரியர் கூறினாரெனவுரைத்தது காண்டல் விரோதமாயிற்றே. அச்சூத்திரமும் உரையும் யாவருங் காணற்குரியவன்றிக் காணப்படாப் பொருளுமன்றே. இவ்வாறாக அவர் உரைத்தது எக்கருத்துப் பற்றியோ அறியேன். அச்சூத்திர வுரையைத் திரிபடவுணர்ந்து இயற்கைப்புணர்ச்சி வேறு களவு வேறெனக்கருதினமையே காரணம்போலும். அவ்வுரையாவர்க்கு மெளிதிற் கிடைக்குமாதலின் அதனை நோக்கியமைக.

(இன்னும் வரும்)

சோழவந்தான், அ. சண்முகம் பிள்ளை.

(அமீர்பீரித் விசுவநாதன், ஜீவ்ராய் இருவரோடும் வர.)

விசுவ. (சுல்தானை வணங்கி)
தோட்டுணை விஜயை துடிக்கும் விஜய!
விஜய நகராள் விஜய தேவன்
விஜய புரிக்கெனை விடுத்தனன் வந்தேன்!
விருப்புடன் கொள்க விளம்பு மொழியை.
கருக்கொள மேகங் கனைத்து நீருண்ணும்
ஆர்கலித் துறையி லடாதன செய்தனன்,
தார்கலிப் புரவியன், நானு பதியா
வைத்த ரசல்கான்! வடகேற் றுறையில்
மொய்த்தநா வாய்களை முருங்கெரி கொளுத்திக்
கடலிடைப் புதைத்துக் கருதிய வர்த்தகம்
இடருறச் செய்தனன். இனைய செய்கையும்,
போர்த்தூ இயர்நம் புணர்ப்பினு லன்று!
பார்த்திவ னிதையெலாம் பார்த்தெனைத் தூதாப்
போந்துரைத் துள்ளம் புகலென விட்டனன்!
வேந்தன தானையை மேற்கொண் டனனோ?
அல்ல தவன்செய லமைந்த வாறோ?
சொல்லுக! அவன்செய் தொழிலே யென்னில்
தக்கதோர் தண்டனை தருதியோ? வலது
பக்கலுற் றவற்குப் பரிந்துபே சுதியோ?
உரைத்ததை யுரைப்ப னெற்றனு தலினல்;
வரைத்தடந் தோளினுய் மனக்கருத் தென்னே?

சுல்தா. நாத! நின் னுரைக ளயர்ந்து கேட்டனன்;
போதுக! வென்றுரை புகலு முன்னரே
பேசினை யாதலிற் பேச்சி லிருந்தனன்:—
ஆசனத் தமர்க! வடையல ராயினும்
வீரமிக் குடையரை விழைந்து கொண்டிடும்
வாரமே செய்கையா மதித்து நின்றனன்!
நாதனு மரிய நாதனும் போரிற்
போதகம்! அம்பைப் பொழிசிலை தரித்த
பயோதர மென்ச் சலா பத்கான் பகர்தரக்
கியாதியைக் கேட்டனன்; கிடைத்தநன் வரவும்;
அமர்க! நின்வர வறிந்தனன். அமைச்ச!
தமர வேலைத் தானு பதியின்

செயலை நோக்குதி! செவ்விது! நாவாய்
துயல்வரு துறையிற் றொழிற்கிடை யூரா
வாற்று இன்றது மழுகிதே! யம்ம!
சாற்றுவ தினியென்? தவறிழைத் தவனை
வர்த்தகத் தலைவனு மதித்தல் செய்யேம்!
கர்த்தனுக் கிணங்காக் காரியஞ் செய்தனை
உன்றொழி விழந்தினி யுறுதுயர் கொள்கவென்
றின்றே நிருப மெழுதுக வவர்க்கு;
நாகமன் குமர்! நீ நாடி வந்தது
மாக நெடுங்கொடி நதியின் வடபால்
முன்னர்ப் படுத்திய முதுக்கலைப் பங்கலை
அந்நிலை ரேய்ச்சூர் அரணையு மாட்சி
கொண்டிட நீவிர் குறித்த வுரிமையை
விண்டிட வாமென விளம்பி யிருந்தேம்!
அன்னது குறிப்பெனி லதங்களி கொள்ளுமா
றென்ன வுரைப்பதென் றிருப்பவே றியம்பினை!

விசுவ. அன்னது அரச! வமைந்து கிடந்தது,
பின்னது முடிவு பெறும் படியாக!
உன்னிலை யறிந்தன னுரைத்ததை யுரைப்பேன்!
இன்றிர விருந்தெழு விரவி யெழுவேம்;
விடையுந் தருதி!

சுல்தா. வீரனே! செல்க!
படைத்தலைக் கிழவ! பரிந்துடன் கொண்டுன
தில்லி லமைந்தே, யிவரை
வல்லை விடுதி வைகறைப் பொழுதே!

களம் 2. முற்றும்.

## அங்கம்—3. களம்—3.

அந்நிலா முற்றத்துக் காஞ்சனை தனியே நின்று மறுபடியும் வருந்தச் சகியாதவளாய் அன்றிரவே அம்மாளிகையைச் சூழ்ந்த அகழியிலே விழுந்து தன்னுயிரை மாய்ப்பதாகப் புலம்பிக்கொண்டிருக்க, அச்சமயத்து விசுவநாதன் அங்கே புகுந்தான். அவளுடன் உரையாடி அவள் காஞ்சனையென்றேயறிந்து ஜீவராயனை விளித்து நூலேணியை வாங்கிச் சுருளவிழ்த்து நிலாமுற்றத்து நின்ற காஞ்சனை பிடித்துக்கொள்ள ஓர் நுனியை விட்டெறிந்தான். காஞ்சனையும் தைரியத்தோடு அம்முனையைப்பிடித்து நிலாமுற்றத்து விளங்கிய துவசத்தம்பத்தினடியிற் கட்டினாள். ஜீவராய் மற்றோர் முனையை ஓர் மரத்திற்கட்ட விசுவநாதன் விரைவில் ஏணியேறிச் சென்று நிலா முற்றத்துக் குதித்தான். காஞ்சனை களிகூர்ந்து அகழியை இலக்ஷியம் செய்யாது ஏணியின் வழியே கீழிறங்கினாள். விசுவநாதன் பின்தொடர்ந்து வந்து காஞ்சனையை நிலத்திற் கண்டு கடவுளை வந்தித்து நூலேணியை வெட்டி மேலே செய்ய வேண்டிய விஷயங்களை நினைத்தான். விசுவநாதன் தனது உடைகளைக்களைந்து காஞ்சனை பூணும்படி செய்தனன். காஞ்சனை விசுவநாதனாகவும் விசுவநாதன் ஜீவராய் உடைகளைத் தரித்து அவனைப்போலவும் முறையே மாறுவேடம் பூண்டு ஜீவராயைத் தனியே விடுத்துப் பிறகு அவனை ஏற்றுக்கொள்வதற்கு வேறு சூழ்ச்சி செய்வதாகச் சொல்லிச் சலாபத்கான் வீட்டிற்குச் சென்றனர்.

## அங்கம்—3. களம்—3.

இடம்—காஞ்சனை இருந்த உன்னத மாளிகையும் அகழ்ப்புறத்து இராஜ வீதியும். காலம்—யாமம்.

(சந்திரன் பிரகாசிக்க. காஞ்சனை நிலாமுற்றத்து நின்றுவருந்த.)

(நேரிசையாசிரியப்பா.)

காஞ்ச. இருபதோ டைந்துநா ளிறந்தன. இறைவன்
வருவதோ காண்கிலன். வாணு டிறப்பதே
சரதம்! தவிர்க்குந் தளையென
விரதமிருந்ததும் வீணாய் விட்டதே!

(விருத்தம்)

வண்டிருக்கு மலர்த்தாரான் வனசமல ரெடுத்தடியேன்
வகுத்த செய்கை
கண்டிருக்கு மெனிலிறையுந் தாழாது சூழுமெனக்
கருதி யாவி
கொண்டிருந்தே னித்துணையுங் கோதில்பெரு விரதமொன்று
குறித்து நின்றேன்
பண்டிருந்த விதிப்பயனைப் பாயநிலைத் தள்ளவரியார்
பறிக்க வல்லார். (1)
தருமநெறி யுடையபெருந் தகையருளாற் றமியேன்றன்
றளையை நீக்க
வரும்வருமென் றெண்ணிவழி பார்த்திருந்தேன் வற்றாத
வசைக்குள் ளானேன்
இருநிலத்தி லென்போல்வா ரினிப்பிறவார் பிறந்தாலு
மிடருறார்கள்
பெருமைதிகழ் விஜயநக ரிறைமகளாய்ப் பிறந்துபெற்ற
பேறு நன்றே. (2)

(வேறு)

பாதகன் றவணைநாள் பார்த்து நின்றனன்
ஏதினி யெண்ணுவ துளதிம் மாளிகை
வீதிவாய்ந் தகழியில் விரைந்து வீழ்ந்திவண்
சாதலல் லாதினித் தாழ்க்கற் பாலதோ. (3)

(விசுவநாதன் வீதியில்வர காஞ்சனை மேலும்வருந்த.)

கண்டது முண்டுகொல் கணித்த செய்கையும்
கண்டகர் நாடிதைக் கண்டறி வார்கொலோ
பெண்டனி மைக்குளம் பேதுறு மோவெனக்
கொண்டிட நாதனார் குறித்தற் றார்கொலோ. (4)

விசுவ. (நேரிசையாசிரியப்பா)
கொண்டிட நாதனுங் கூடின னென்றாள்!—
ஒண்டொடி யாரோ? ஓதிமம் போல
உலாவுத லொழிந்தய லொதுங்கி வருந்தி
நிலாமுற் றத்து நின்றன ளினியே (காஞ்சனையை நோக்கி)
காஞ்சனை!—

காஞ்ச. (கீழ்நோக்கி) யாரது?— காதல!— நாத!—

விசுவ. ஆம்! சிறை மீட்ப வறிந்து வந்தனன்.
வருந்தேல். கொள்க மனத்திடம். மாளிகை
இருந்தே யுன்னை யெளிதிற் கொள்வன்!

காஞ்ச. மாளிகை யிருந்தேன்; வளைந்த சுகழியும்;
மீளுவ தெப்படி ?—

விசுவ. வீசுவ னுன்பாற்;
கயிற்றே ணியைநீ கையிற் பிடித்துச்
செய்ய துவசஞ் சேர்த்திய தூணில்
செவ்விதிற் கட்டுக. சேரமற் றோர்முனை
யிவ்விருக் கத்தி லிறுகப் பிணிப்பன்.
அன்னது சுவற்றி லமைத்த வேணிபோல்
துன்னும். அஃது துப்புடைத் தாகுமோ
வென்று காணுமா றேறுவ னிறங்குவன்!
பின்றை யவ்வழி பிடித்துநீ வருக.—
ஜீவராய்!— (ஜீவராய் கயிற்றேணியுடன் பிரவேசிக்க)
வருக, சிக்கிரந் தருக! (கயிற்றேணியை வாங்கி)
பாவையே! யெறிவன், பற்றிக் கொள்கநீ!

[கயிற்றேணியின் மற்றோர் முனையை விட்டெறியக் காஞ்சனை பிடித்துக்கோள்ள.]

நன்கு! நன்கா நாட்டிய தூணில்
வன்புடன் கட்டுக.

[காஞ்சனை தூணிற்கட்ட, விசுவநாதன் மற்றோர் முனையை மாத்திற்கட்ட]

வார் கயிற் றேணி
அமைந்த தழகே! யரிவை! காண்டி.—
(விசுவநாதன் ஏணி ஏறிச்செல்ல)

காஞ்ச. கனமொடு விரதநான் கைக்கொண் டதுமின்
வரவைத் தந்தது. வருக மெல்லவே!
(விசுவநாதன் நிலாமுற்றத்துக் குதிக்க)

விசுவ. அரிவை! கயிற்றி லமர்ந்து செல்க
நாட்டஞ் சிதறேல், நண்ப! காஞ்சனே!
தாட்டுணை தவறேல்; தளிர்க்கைப் பிடியும்
தளரேல், இறங்குக.—

[காஞ்சனை ஏணிவழியேயிறங்கி வீதியில் வந்து]

காஞ்ச. [ஜீவராயனைநோக்கி] தகையுடைக் குரிசில்!
உளப்பிணி யொழித்தெனக் குதவி செய்ததை
மறப்பெனோ நன்றி! (விசுவநாதன் இறங்க)
மன்னவ! வருக!

(விசுவநாதன் வாளையுருவி ஏணியைவெட்ட)

பிறப்பின் பயனைப் பெற்றன னடியேன்!

விசுவ. அரிவை! இவணுற லழகுடைத் தன்று.
விரைவினிற் செல்லுதும், விளம்புவன் கேளாய்!—
உன்னையான் மீட்க வுதவி புரிந்தவன்
இந்நகர்த் தானைக் கிறைவன்;—என்றோழன்
சலாபத் கான்மனை சாருதும். அவனை
யலான்மற் றொருவ ரறிந்திடா ரிதனை!
ஆதலி னுருவங் கரந்தவண் விரைந்து
போதலே நெறியாம்! பூணுக வென்னுடை,
பெண்ணெனு முருவம் பிறரறி யாமல்.

(விசுவநாதன் தன்னுடைகளைக் களைந்துகொடுக்க)

நண்ணுவன் யானும் நண்பன் ஜீவராய்
ஆடையைத் தரித்தே!

[காஞ்சனை விசுவநாதனைப்போல் வேடமாற விசுவநாதன் ஜீவராயைப்போல் வேடம்பூண]

ஜீவரா. யருமைத் தோழ!
வேடம் பூண்டீர்! விளங்கிழை தனக்கு
முன்போல் வேட மொத்து நின்றதே!

காஞ்ச. நின்போ லுருவம் நேர்ந்தன னாதன்!—

விசுவ. காதல! இங்கு கடிகை நில்லாய்!
போதுவம் நாங்கள்; புக்க பின்னர்
இழைக்குஞ் சூழ்ச்சியா லெழுந்தனை
அழைப்பவன் சேவக னாகநீ வருகவே!

(ஜீவராயைத்தனியே விட்டு இருவருஞ்செல்ல)

களம்—3. முற்றும்.

## அங்கம்—3. களம்—4.

சலாபத்கான் வீட்டில் காஞ்சனை அவன் மனைவியும் தனது தோழியுமான நூர்ஜஹானோடு உரையாடிக் கொண்டிருக்க, சலாபத்கான் தனது சேவகன் உடைகளை யெடுத்துக்கொண்டு வெளியே சென்று ஜீவராயனுக்கு மாறுவேடம் பூட்டி வீட்டுக்கழைத்து வந்தனன். பிறகு இம்மூவரையும் அவர் நாடு நோக்கிப் பகலெழுவதன்முன் அனுப்பிவிடவேண்டிய ஏற்பாடுகளைச் செய்து அவர்களையும் அனுப்பிவிட்டான்.

## அங்கம்—3. களம்—4.

இடம்:—சலாபத்கான் வீடு. காலம்—வைகறை.

(நூர்ஜஹானும், காஞ்சனையும் உரையாட)

(நேரிசையாசிரியப்பா)

நூர்ஜ். வார்புனற் கிருட்டினை மருங்கு திகழுஞ்
சோரபூர் தன்னிற் றோன்றி வளர்ந்தேன்.
தாதை யென்னைச் சாலபத் கானுக்
கீந லெண்ணி யிருந்தனன். சுல்தான்
குட்புஷா தம்பி கூலியி மாதுஷா
உட்படுங் காத லுடையனா யுற்றே
கவர்ந்தெனைக் கொண்டு கடுகினன் கிருட்டினை.
தவத்தின் பான்மையால் தையலே, உன்றன்
நாதனாங்கு நண்ணினன். அறிந்து !
வேதனை யொழித்து விடுத்தனன் பதிக்கே !—
அன்னவன் செய்த வரிய நன்றியை
என்னருங் கணவனும் யானு மறவேம் !—
உன்குறை தீர்த்தே யொழித்தனன் சிறையு
மென்ப தவர்க்கோ ரெளிய செயலே !
நாதனுஞ் சிறந்த நாயகன். அவனது
காதலுக் கேற்ற காரிகை நீயே !—
கேளடி காஞ்சனை ! கேளி ரெனக்குமுன்
நாளிலென் படிவ நலத்தைக் கண்டு
துவலரு நாமம் நூர்ஜஹா னென்றே
நவின்றனர். நங்கை ! உன்னலத்தைப் பொழுது

நோக்கி னுனக்கு நூர்ஜஹான்ஸேஹஸின்
ஆக்கிய நாம மளித்திடத் தகுமால்!—

[விசுவநாதனும், சலாபத்கானும், சேவகனைப்போல வேடந் தரித்த ஜீவராயும் உள்ளேவர]

சலா. எடுத்த வேடம் இராய! நீ களைக!—
கொடுத்த வாணைபோற் கொண்ணர்ந்தனன் றேழனை
நாதனே! வைகறை நண்ணிய தாதலின்
போதலே துணிக!—

விசுவ. போதலெவ் வகையே?

நூர்ஜ. ஐயரே! நீவி ரகல்வதே குறிந்தீர்!
மெய்யன் புடையார் விலகல் கொடிது!

விசுவ. அம்ம! நீ யுரைத்தது மன்பின் மிகுதியாம்.
எம்மனோர் நிலைமை யிருந்த தறியாய்!

சலா. நூர்ஜே! யன்பு நுவலக் காலமோ?
பார்ப்பவ ரறியாப் பான்மையி லிவர்கள்
இன்னே யெழுந்தன ரேகுத லினிதே!

நூர்ஜ. கன்ன லின்மொழிக் கயிரவ வாயாய்!
என்னை மறப்பையோ? ஏகினை யாயினும்
உன்னை மறவேன்! உனக்கியான் கடிதம்
எழுதுவ னூர்ஜஹான் ஸேஹஸீ னென்று;
பழுதிலா நண்பு பாலித் திடுவாய்!

காஞ்ச. எம்மணி நகர்க்கியா மேகுவ மாயினும்
அம்மணி! உன்னையு மறப்ப தாகுமோ?

விசுவ. நண்ப! இருவரே நாடி வந்தனம்!
பண்படு சொல்லியிப் பாவை தன்னொடு
மூவ ராகினேம்! மூதூர் கடக்க
லாவதோர் கரும மகத்தி லுன்னினன்.
என்னுடை காஞ்சனை பேற்றுப் போதந்,
தன்னுடை தன்னையே தரித்த நண்பனோ
டுனதெழி லாடையே யுடுத்துக், காலென
மனமெனக் கடக்குமுன் வயப்பரி யேறி,
நீயுடன் போந்து நெறிகொள விட்ட
தேயு மாறே யெழுவ தெண்ணினன்!
உபாய மிதுதான் உன்மன மேற்குமோ?

## புத்தக வரவு.

சென்ற மாதத்தில் வரப்பெற்ற மாற்றுப் பத்திரிகைகள்,— I. விவேகபாநு: புத்தகம் 7. II. விவேகசிந்தாமணி: நம்பர் 3. III. மாதர்மனோரஞ்சினி, இலக்கம் 6. IV. சைவ சிந்தாந்தபானு—11 முதல் 16-வது நம்பர் இறுதியாகவுள்ள 6 சஞ்சிகைகள். V. ஸ்ரீவாணிவிலாஸினீ நம்பர் 4. VI. சுதேசி வாரப்பத்திரிகை. VII. சிங்கைஜனமித்திரன், வாரப்பத்திரிகை. VIII. பிரஜானுகூலன் நம்பர் 3. IX. நீலலோசனி.

தக்ஷிண இந்தியாவின் சரித்திர சாரசங்கிரஹம்; இவ்வரிய நூல் சேலம் பகடால நரசிம்மலுநாயுடு அவர்களால் இயற்றப்பட்டது. இவ்விதமான ஓர் நூலை எழுதுவது மிகவும் அற்பமான வேலை அல்ல. தென்னிந்தியாவின் சரித்திரத்தை யெழுதுதல் மற்ற வேறு சிலதேச சரித்திரங்களை யெழுதுதல் போலன்று. ஆங்கில தேசசரித்திரத்தைப் பார்த்தால் அது ஒரே தேசசரித்திரமென்றும் அதன் அரசர்கள் பல வம்சத்தினர்களாக விருந்தாலும் ஒரே நாட்டைக் காலவளவையின் முந்தியோ பிந்தியோ கிரமமாய் ஆண்டார்களென்றும் விளங்கும். இங்கிலாந்து 9-ம் நூற்றாண்டில் எவ்வளவு விஸ்தீரணமுள்ளதாக விருந்ததோ அதே விஸ்தீரணமுள்ளதாகத்தான் இப்போதும் இருக்கிறது. அதே நாட்டைத்தான் சாக்ஸன் ஜாதியாரும், அவர்களுக்குப்பின் நார்மன் வம்சத்தினரும், அவர்களுக்குப் பின் பிளாண்டாஜீனிஸ்டர்களும், அவர்களுக்குப் பின் முறையே டூடர் வம்சத்தாரும், ஸ்டூவார்ட் வம்சத்தாரும், ஹானோவர் வம்சத்தாரும் ஆண்டுவந்திருக்கிறார்கள். அந்த ஆங்கில இராஜாங்கம் நாளுக்கு நாள் விருத்தியடைந்து இப்போது உலகமெல்லாம் பரவியிருந்தாலும், அரசர்களின் வம்சமுறை தவறாமலும், இராஜாங்கத்துக்கு இருதயம்போன்ற பிரதான பட்டணம் மாறாமலும் வந்துகொண்டிருக்கிறது. இத்தன்மையான இராஜாங்கத்தைப் பற்றிய சரித்திரங்களை யெழுதுவதும் எளிது; படிப்பதும் எளிது. ஏனென்றால் நிஷ்கர்ஷையாய் நாம் இன்னதுதான் படிக்கிறோம் என்ற நிலைமை ஏற்படும். தக்ஷிண இந்தியாவின் சரித்திரம் அப்படியல்ல. நிஷ்கர்ஷைபற்று, ஐயப்பாட்டிற்கிடமுண்டாகும் வண்ணம் நாடுகளும் இராஜாங்கங்களும் இராஜவம்சங்களும் அடிக்கடி மாறிக்கொண்டு ஒரு நூற்றாண்டில் அமைந்த தேசப் பிரிவினை மற்றொரு நூற்றாண்டில் அழிந்துபோய், சமுத்திரத்தினிடத்தில் ஓயாது ஓடி அலைகின்ற அலைகளைப்போல, தக்ஷிண இந்தியா ஒரு நிலைபற்றுப் பலவிதமான மாறுபாடுகளை யடைந்து வந்தது. ஆகலால் இந்தச் சரித்திரத்தை நிதானத்தோடு பார்த்து எழுதுதல் மிகவும் பிரயாசை. இதுகாறும் இந்தியாவைப்பற்றிப் பலரும் எழுதியுள்ள நூல்களையும், கல்வெட்டு, செப்பேடு, தாம்பிரஸாஸனம், முதலான சரித்திர சர்ச்சா விகிதங்களையும், பழைய நாணயங்களையும், அயல் நாட்டார்கள் கூறும் சரித்திரங்களையும் நிதானத்தோடு படித்தாலொழிய இச்சரித்திரத்தை எழுதுவது இயலாது. ஆகலால் இச்சரித்திரத்தைச்

சேலம் பகடால நரசிம்மலு நாயுடு அவர்கள் அவர்களால் கூடிய வரையில் செம்மையாய் எழுதியிருக்கிறார்களென்பதிற் சந்தேகமில்லை. இவ்வாறு எழுதியிருப்பதில் இங்குமங்கும் சில கால வித்தியாசங்களும், பெயர் வித்தியாசங்களும், மற்று வேறு குறைகளும் காணப்படுகின்றன. என்றாலும் இந்நூலுக்குப் பழுது கூறுவது தகுதியல்ல கட்டின வீட்டிற்குப் பழுது சொல்லுவது யாவருக்கும் எளிது. இவ்விதமான சரித்திர நூல்களில் இது முதனூல் என்று கருதப்படுகிறது. இந்நூலாசிரியர் இனிமேல் இவ்விஷயமாக எழுதுபவர்களுக்கு வழி காட்டியிருக்கிறார்.

ஸ்ரீருக்மணீபரிணயம்: இந்நூல் ஸ்ரீ ராமாயண ஸிம்ஹம் பருத்தியூர் கிருஷ்ண சாஸ்திரிகள் குமாரர் கவியாணராம சாஸ்திரிகள் கீதரூபமாய் இயற்றியது. சொன்னயமும் பொருட்செறிவும் உடையதாய்ச் சுலபமான வர்ணமெட்டுக்களால் அமைக்கப்பட்டுள்ளது. இப்புத்தகம் அரிபக்தியிற்சிறந்த பாகவதசிரோமணிகளுக்குப் பயன்தரத்தக்கதாயும் தமிழ் நாட்டுப் பெண்மணிகளுக்கு உவப்பையும் புத்தியையும் பக்தியையும் கொடுக்கத்தக்கதாயும் இருக்கின்றது.

தொல்காப்பியப்பாயிரவிருத்தி: இஃது சோழவந்தானூர் அரசஞ் சண்முகனாரால் இயற்றப்பட்டது. தொல்காப்பியத்தின் நுதலணியாய்வைத்து ஆசிரியர் பனம்பாரனார் இயற்றிய சிறப்புப்பாயிரத்தின் விருத்தியுரையாகிய விந்நூல் தமிழ்க் கல்விக்கோர் களஞ்சியமாகும். இவ்வுரை யாசிரியர் எந்நூலுக்கும் பொதுவாகும் பொதுப்பாயிர விலக்கணங்களை இந்நூலுக்கு முன்னிலையிலமைத்துக் கூறிச்செல்லா நிற்கையில், முன் சென்ற வுரையாசிரியர்கள் மாறுபடக்கொண்ட வபிப்பிராயங்களையும் திரிபுகளையு மெடுத்துக்காட்டிக் கண்டித்தும் ஒருசார் அவ்வுரையாசிரியர்களோடு ஒருமனப்பட்டும் தர்க்கித்தல் வெகு நயமாயிருக்கின்றது. இரண்டாம் பகுதியில் இந்நூற்குரிய சிறப்புப்பாயிரத்தை விளக்கி, நூல்வழங்குமிடமும், நூலினது யாப்பும், நூலின் வழியும், நூலுட் கூறிய பொருளும், அப்பொருளுக் கிடமும், நூலைக்கேட்டோரையும், கேட்டோரது பெருமையையும், நூலின் பயனையும், காலத்தையும், களனையும், காரணத்தையும், நூலாசிரியரின் பெயரையும் காரண காரிய முறைகாட்டி விரிவாய்க் கூறுகின்றனர். இந்நூலாசிரியர் கல்வித்திறத்தையும் வன்மையையும், இவர் வசன நடையின் வனப்பையும் கண்டு அகமகிழ்ந்தனம். இச்சண்முக விருத்தியின் மற்றைப் பகுதிகளும் விரைவி னச்சேறுமாறு ஈசனைப்பிரார்த்திக்கின்றோம்.

களப்பாள் என்னும் தேவதாருவனத்தலபுராணம்: இப்புராணம் பின்னத்தூர், ப்ரம்மஸ்ரீ ஸ்ரீ அ. நாரணசாமி ஐயரவர்கள் வடமொழியிலுள்ள ஷெ ஊர் ஸ்தலபுராணத்தை முதனூலாகக் கொண்டு இயற்றியது. பல சந்தமும் விரவிவருகின்ற இவரது பாடல்கள் படிப்பதற்கு இனிமை பயப்பனவாயும் சொன்னயமும் பொருணயமுமுடையனவாயுந் திகழ்கின்றன.

பத்திராசிரியர்.

# விளம்பரம்.

"கேசவர்த்தனி". உலகத்தில் அநேகவகைத் தைலங்களிருப்பினும், எல்லாவற்றிலும், சிரோரோகங்கள், நானாவித நேத்திரரோகங்கள், செவி நோய்கள் முதலியவைகளைக் குணப்படுத்தி, மூளைக்கு உறுதியைக் கொடுத்து, மிகுந்த தேஜசு சரீரத்திற்கு உண்டாக்குந் தன்மை இதனிடத்தில் விசேஷம் அமைந்துள்ளது. மிகுந்த வாசனையுள்ளது. இதன் அபூர்வ குணங்களை தாங்கள் அநுபோகத்தால் தெரிந்து கொள்ளலாம். (விலை ரூ 1.) நவம்பர் மாதம் வரையில் வாங்குவோர்களுக்கு (விலை அணா 0—8—0.)

"தந்த ரோக நிவாரணி". இது நீண்டநாள் பிரயாஸத்தினால், அநேக ஆயுர்வேத முறைகளின்பேரில் பற்களை நன்றாய்த் துலக்கவும், ஈரல் முதலியவைகளை உறுதிசெய்யவும், அரோசிக நிவர்த்திசெய்யவும், வாயில் நல்ல பரிமள வாசனை எப்பொழுதும் வீசவுங்கூடிய குணங்களுடன் மிக்க முயற்சியெடுத்துக்கொண்டு பவுடர் செய்யப்பட்டது. (விலை 4 அணா) நவம்பர் மாதம் வரையில் (விலை 2-அணா.)

"ஜீரண குளிகை". அஜீரணந்தான் சகல ரோகங்களுக்கும் முதற்காரணம். ஆகையால் தினம் ஒரு குளிகை காலையில் அல்லது போஜனத்தின்பேரில் சாப்பிட்டு வந்தால், அஜீர்ணம், மலச்சிக்கல், வாந்தியெடுத்தல், வயிற்றுவலி முதலிய துற்குணத்தை மாற்றி சுகுணத்தைத்தரும்.

32 குளிகை கொண்ட டப்பி 1க்கு (விலை அணா-8.) நவம்பர் மாதம் வரை (விலை 4-அணா.)

கமிஷன் ஏஜண்டுகள் தேவை. மேற்கண்டவைகள் வேண்டுவோர் அடியிற் கையொப்பமிட்டிருப்பவருக்கெழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆர். பா. தேவே,
தஞ்சாவூர்.

---

## நோய்க் கிடங்கொடேல்.

(குறிப்பு) இதனடியிற்கண்ட ஔஷதங்கள் அருமையையுடையது. அனுபவத்தாலறியலாம்.

தந்தரோக நிவாரணி. டப்பி 1-க்கு விலை அணா-2. இது பல்வலி, ஈரல் கரைதல், பல்லரணை, இரத்தம் வடிதல், அசைதல், இதழ் சுரத்தல், நாவிலுண்ணி போற்றடித்தல், வாய்நாற்ற முதலிய ரோகங்களை நிவர்த்தித்து பல்லிற்கு நல்ல ஒளியையும், உறுதியையுந் தரும்.

50 கோரோசனை மாத்திரை சீசா 1க்கு அணா-8. இம்மாத்திரை குழந்தைகளுக்கு எந்த நோயுமணுகாதபடிக்கு காப்பாற்றக்கூடிய ஔஷதம். மற்ற யாவர்களுக்கும் ஜலதோஷம், அற்ப இருமல், கபம், மூச்சு முதலியவைகளை நிவர்த்தித்து சௌகரியத்தை யுண்டுபண்ணும், மற்ற விபரங்கள் மருந்துடன் கிடைக்கும்.

தாதுவிர்த்திலேகியம் டப்பி 1-க்கு அணா-12. இதனை காலை மாலையாகிய இரண்டு வேளையும் கழற்சிக்காய்ப்பிரமாணம் உண்ண, உஷ்ண சம்பந்தமான எவ்வித வெட்டை ரோகங்கள், மலசலபந்தங்கள், பல பேதங்களையுடைய மூலரோகங்கள், அதிபோகத்தாலுண்டாகிய நரம்பின் தளர்ச்சி முதலியவைகளை நிவர்த்தித்து போகசக்தி முதலிய நற்குணங்களைச் செய்விக்கும். (மகத்தான மேகமெல்லா மற்றுப்போகும், வற்றி நின்றதாதுவெல்லா மூற்றங்காணும், மெய்நிறைந்த நாடியெல்லாம் விரைந்துநிற்கும், மேன்மையொடு அறிவதனை விளங்கச் செய்யும், நையும் வகைமூலமதை நாடாதோட்டும், நன்மையுள்ள சரீரமதை கற்போலாக்கும், உய்வகைசேருத்தமர்க ளறியச்சொன்னேன் உதரத்தில் வெட்டையெல்லாமொழிந்து போமே)—என்றார் ஆன்றோர்.

உஷ்ண நிவிர்த்தி யெண்ணை விலை ரூ 1—0—0. மனிதர்கட்குப் பலவாற்றானு முண்டாகு மெய்ந்நோய்க்கும் உஷ்ணமே காரணமாகையால் அதனைப் போக்குவதி லிந்த எண்ணை மிக்க வலிமையையுடையது. சாப்பிடும் விதம்—காலையில் இச்சீசாவிலுள்ள வரைகளில் ஒன்று, அல்லது ஒன்றரையளவு சாப்பிட (காப்பி சாப்பிடுகிறவர்களாயின் எண்ணை சாப்பிட்ட (16) நிமிஷத்துக்கு பிறகு சாப்பிடலாம்) மூன்று அல்லது நான்கு தடவை மலத்தைக்கழித்து மூலாதாரத்திலுள்ள உஷ்ணத்தையும் வாயுவையும் போக்கி சௌகரியத்தைச் செய்விக்கும். பின்னர் முறையே இரவில் சயனித்துக்கொள்ளும்போது மூன்று பைசா எடைவீதமாக சாப்பிட்டுவர, மலசலபந்தம், பசியின்மை, கைகால் அசதி, பல வேறுபாட்டோடு நீண்டகாலம் பீடித்து வருத்துகின்ற வெட்டை, மூலம் முதலிய சகல நோய்களையும் நிவிர்த்தித்து சரீரதிடத்தை யுண்டுபண்ணும், இதன் குணம் இன்னும் அளவிறந்ததாகலின் அவை யாவும் அனுபவத்தில் விளங்கும் குழந்தைகட்குரிய கணைச்சூட்டைப் போக்குவதில் மிக்க வல்லமையுமுடையது. (பத்தியம்) சுத்த போஜனமுடையார்க்கு ஒன்றுமில்லை. அசுத்த போஜனிகளாகில் வெள்ளாட்டிறைச்சி ஒன்று மாத்திரமாகும்.

குறிப்பு:—வயது முதிர்ந்தோர் எண்ணெய் சாப்பிடக்கூடாதென்னும் விதி இதற்கு இல்லை.

கருந்தட்டாங்குடி,
தஞ்சாவூர்.

சிவ. சோலைமுத்துப்பிள்ளை,
TAMIL PANDIT & NATIVE PHYSICIAN.